சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

வைரமும் கண்ணாடித் துண்டும்

ஒளி மைந்தன்
—சங்கு மணி

யார் சளைத்தவர்?
—வ. ரா.

500 ரூபாய் சுகம்
—திப்பு

"ஒன்று செய்வோம்"
—சிட்டி

மரண தண்டனை
—ஹியுகோ

மேனகையும் சகுந்தலையும்

கல்லிடைக் குறிச்சி ராமலிங்க பாகவதர்
—ஈ கிருஷ்ணய்யர்.

புத்தகம் 4. சித்திரை மீ 8உ (20-4-34) வெள்ளி இதழ் 21.

"பறையர்"

(பாரதியார் எழுதியது)

[காலத்தைக் குடைந்து முன்னே பார்ப்பவனே கவிஞன். இன்றைக்கு ஹரிஜனங்களைக் கை தூக்கிவிட ஹிந்து ஜாதியில் ஓர் உணர்ச்சி ஊறி வருகிறது. இன்றைக்குப் பதினேழு வருஷங்களுக்கு முன்னமேயே இந்தக் காரியத்தின் அவசியம் தமிழ்நாட்டின் நவயுகக் கவியின் மனக் கண் முன் தோன்றி விட்டது. 16-10-1917-ல் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் எழுதிய ஓர் பழைய கட்டுரை இங்கு மீண்டும் பிரசுரிக்கப்பட்டுளது.]

"பறையர் என்பது மரியாதையுள்ள பதம் இல்லையென்று கருதி இக் காலத்தில் சிலர் பஞ்சமர் என்ற சொல்லை அதிகமாக வழங்குகிறார்கள். நானும் சில சமயங்களில் பஞ்சமர் என்ற சொல்லை வழங்குவதுண்டு. ஆனால் பறையர் என்பதே மேற்படி ஜாதியாருக்குத் தமிழ் நாட்டில் இயற்கையாக ஏற்பட்ட பெயர். பறை என்பது பேரிகை. பூர்வ காலத்தில் நமது ராஜாக்கள் போர் செய்யப் போகும் போது ஜய பேரிகை கொட்டிச் செல்லும் உத்தமமான தொழிலை இந்த ஜாதியார் செய்து வந்தபடியால், அவர்களுக்கு இப்பெயர் வழங்குவதாயிற்று. அது குற்றமுள்ள பதம் இல்லை என்பதற்கு ருஜு வேண்டுமானால், மேற்படி கூட்டத்தாரால் சென்னையில் நடத்தப்படும் சபைக்குப் "பறையர் மஹா சபை" என்று பெயர் வைத்திருப்பதைக் காண்க. அவர்களை மிருகங்களைப் போல் நடத்துவது குற்றமே யொழியப் 'பறையர்' என்று சொல்லுவதில் ஒன்றும் குற்றமில்லை.

"நந்தனாரையும் திருப்பாணாழ்வாரையும் மற்ற ஹிந்துக்கள் கும்பிட வில்லையா? பறையருக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற்கடமை. அவர்களுக்கு முதலாவது வேண்டியது சோறு. சென்னப்பட்டணத்துப் பட்லர்களைப் பற்றிப் பேச்சில்லை. கிராமங்களிலுள்ள பண்ணைப் பறையர்களைப் பற்றியே பேச்சு. அவர்களை யெல்லாம் ஒன்று திரட்டு. உடனே விபூதி, நாமத்தைப் பூசு. பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு. இரண்டு வேளை ஸ்நானம் பண்ணச் சொல்லு. (புலால் உணவை ஒழிக்கச் சொல்லு). அவரோடு சமத்வம் கொண்டாடு. நான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்களை யெல்லாம் உடனே ஒன்று சேர்த்து இந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள். மடாதிபதிகளே! நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களே! இந்த விஷயத்தில் நீங்கள் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக் கூடிய கைங்கரியம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமான கைங்கரியம்.

"பறையனைப்" 'பறை' (அதாவது ஆதி சக்தி, முத்து மாரி)யின் மக்களென்றும் பொருள் சொல்வதுண்டு. நமக்கு மண்ணுழுது நெல்லறுத்துக் கொடுக்கிற ஜாதியாரை நாம் நேர்மையாய் நடத்த வேண்டாமா? அது சரிதான். இனிமேல் பறையன் கை நீட்டாமலிருப்பதற்கு வழி தேடிக் கொள்ளுங்கள். சென்னப்பட்டணத்திலே நாலு பட்லர்கள் ஹிந்து மதத்தை உல்லங்கனம் செய்தபோதிலும் நாட்டிலுள்ள பறையர் எல்லோரும் உண்மையான ஹிந்துக்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. எனக்கும் ஒரு வள்ளுவப் பையனுக்கும் ஸ்நேகம். அவனுடைய கோயில் அம்மன் மீது நான் பாட்டுக் கட்டிக் கொடுத்தேன். அவன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. அவன் காத்தவராய ஸ்வாமி வேதத்திலே சொல்லிய காற்றுக் (வாயுக்) கடவுளே யன்றி வேறில்லை யென்று அந்தப் பாட்டுக்களினாலே தெரிந்து கொண்டேன். முத்து மாரி யென்ற பராசக்தியுடைய பிள்ளைதான் காத்தவராயன். பறையர்களும் நம்மைப் போலவே வைதிக தேவர்களைப் பூஜிக்கிறார்கள். மற்றொரு முறை சொல்லுகிறேன்.

"அங்கமெல்லாம் குறைந்தழுகு
தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலைய ரேனும்
கங்கைவார் சடைக்
கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் யாம்
வணங்கும் கடவுளாரே"

"பறையர் ஹிந்துக்கள். அவர்களைக் கைதூக்கிவிட்டு மேல் நிலைமைக்குக் கொண்டு வருவது நம்முடைய தொழில்."

“பறையர்”

(பாரதியார் எழுதியது)

[காலத்தைக் குடைந்து முன்னே பார்ப்பவனே கவிஞன். இன்றைக்கு ஹரிஜனங்களைக் கை தூக்கிவிட ஹிந்து ஜாதியில் ஓர் உணர்ச்சி ஊறி வருகிறது. இன்றைக்குப் பதினேழு வருஷங்களுக்கு முன்னமேயே இந்தக் காரியத்தின் அவசியம் தமிழ்நாட்டின் நவயுகக் கவியின் மனக் கண் முன் தோன்றி விட்டது. 16-10-1917-ல் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் எழுதிய ஓர் பழைய கட்டுரை இங்கு மீண்டும் பிரசுரிக்கப்பட்டுளது.]

“பறையர் என்பது மரியாதையுள்ள பதம் இல்லையென்று கருதி இக் காலத்தில் சிலர் பஞ்சமர் என்ற சொல்லை அதிகமாக வழங்குகிறார்கள். நானும் சில சமயங்களில் பஞ்சமர் என்ற சொல்லை வழங்குவதுண்டு. ஆனால் பறையர் என்பதே மேற்படி ஜாதியாருக்குத் தமிழ் நாட்டில் இயற்கையாக ஏற்பட்ட பெயர். பறை என்பது பேரிகை. பூர்வ காலத்தில் நமது ராஜாக்கள் போர் செய்யப் போகும்போது ஜய பேரிகை கொட்டிச் செல்லும் உத்தமமான தொழிலை இந்த ஜாதியார் செய்து வந்தபடியால், அவர்களுக்கு இப்பெயர் வழங்குவதாயிற்று. அது குற்றமுள்ள பதம் இல்லை என்பதற்கு ருஜு வேண்டுமானால், மேற்படி கூட்டத்தாரால் சென்னையில் நடத்தப்படும் சபைக்குப் “பறையர் மஹா சபை” என்று பெயர் வைத்திருப்பதைக் காண்க. அவர்களை மிருகங்களைப் போல் நடத்துவது குற்றமேயொழியப் ‘பறையர்’ என்று சொல்லுவதில் ஒன்றும் குற்றமில்லை.

“நந்தனாரையும் திருப்பாணாழ்வாரையும் மற்ற ஹிந்துக்கள் கும்பிட வில்லையா? பறையருக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற்கடமை. அவர்களுக்கு முதலாவது வேண்டியது சோறு. சென்னப்பட்டணத்துப் பட்லர்களைப் பற்றிப் பேச்சில்லை. கிராமங்களிலுள்ள பண்ணைப் பறையர்களைப் பற்றியே பேச்சு. அவர்களையெல்லாம் ஒன்று திரட்டு. உடனே விபூதி, நாமத்தைப் பூசு. பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு. இரண்டு வேளை ஸ்நானம் பண்ணச் சொல்லு. (புலால் உணவை ஒழிக்கச் சொல்லு). அவரோடு சமத்வம் கொண்டாடு. நான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்களையெல்லாம் உடனே ஒன்று சேர்த்து இந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள். மடாதிபதிகளே! நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களே! இந்த விஷயத்தில் நீங்கள் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக் கூடிய கைங்கரியம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமான கைங்கரியம்.

“பறையனைப்” ‘பறை’ (அதாவது ஆதி சகதி, முத்து மாரி)யின் மக்களென்றும் பொருள் சொல்வதுண்டு. நமக்கு மண்ணுழுது நெல்லறுத்துக் கொடுக்கிற ஜாதியாரை நாம் நேர்மையாய் நடத்த வேண்டாமா? அது சரிதான். இனிமேல் பறையன் கை நீட்டாமலிருப்பதற்கு வழி தேடிக் கொள்ளுங்கள். சென்னப்பட்டணத்திலே நாலு பட்லர்கள் ஹிந்து மதத்தை உல்லங்கனம் செய்தபோதிலும் நாட்டிலுள்ள பறையர் எல்லோரும் உண்மையான ஹிந்துக்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. எனக்கும் ஒரு வள்ளுவப் பையனுக்கும் ஸ்நேகம். அவனுடைய கோயில் அம்மன் மீது நான் பாட்டுக் கட்டிக் கொடுத்தேன். அவன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. அவன் காத்தவராய ஸ்வாமி வேதத்திலே சொல்லிய காற்றுக் (வாயுக்) கடவுளேயன்றி வேறில்லையென்று அந்தப் பாட்டுக்களினாலே தெரிந்து கொண்டேன். முத்து மாரி யென்ற பராசக்தியுடைய பிள்ளைதான் காத்தவராயன். பறையர்களும் நம்மைப் போலவே வைதிக தேவர்களைப் பூஜிக்கிறார்கள். மற்றொரு முறை சொல்லுகிறேன்.

“அங்கமெல்லாம் குறைந்தழுகு
தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலிய ரேனும்
கங்கைவார் சடைக்
கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் யாம்
வணங்கும் கடவுளாரே”

“பறையர் ஹிந்துக்கள். அவர்களைக் கைதூக்கிவிட்டு மேல் நிலைமைக்குக் கொண்டு வருவது நம்முடைய தொழில்.”

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நே. 8088 | ஆசிரியர்: சங்கு, ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] சித்திரைமீ 8உ வெள்ளிக்கிழமை (20—4—1934) [No. 21

ஹோர்-சர்ச்சில் லடாய்

இந்தியா மந்திரி ஸாமுயேல் ஹோர் இன்று மாட்டிக்கொண்டு விழிக்கிறார். அவர்மீது பார்லிமெண்டில் சர்ச்சில் புகார் செய்துவிட்டான். புகார் பின் வருமாறு: "இந்தியாவின் அரசியலை நிர்ணயிக்க கூட்டுக் கமிட்டிக் கூட்டம் நடந்தபோது மாஞ்செஸ்டர் வர்த்தகச் சங்கம் ஓர் சாட்சியத்தை சமர்ப்பித்தது. அந்த சாட்சியம் வெள்ளைக் கடுதாசித் திட்டத்தை எதிர்ப்பதா யிருந்தது. ஆகவே ஸாமுயேல்ஹோர் லார்டு டெர்பி என்பவரின் உதவிகொண்டு மாஞ்செஸ்டர் வர்த்தகச் சங்கம் தங்களது சாட்சியத்தை மாற்றிக்கொள்ளுமாறும் வெள்ளைத் திட்டத்தை ஆதரிக்குமாறும் கட்டாயப் படுத்த ஏதேதோ சூழ்ச்சி செய்தார். மேற்படி சங்கமும் வேறு வழியின்றி சில மாறுதல்களைச் செய்தது. சாட்சியம் சொல்ல வருபவர்களை மடக்கி தம் விருப்பப்படி சொல்லுமாறு கட்டாயப் படுத்துவது பெருங்குற்றம். ஆகவே இந்தக் குற்றத்தை நாம் விசாரிக்க வேண்டும்" என்பது சர்ச்சிலின் கட்சி. ஸாமுயேல் ஹோர் ஏதேதோ சால்ஜாப்புகள் சொல்லிப் பார்த்தார். ஏறவில்லை. கடைசியில் விசாரணை செய்வதென்ற தீர்மானம் பார்லிமெண்டில் நிறைவேறி விட்டது.

'வெள்ளைத் திட்டத்தைக் காப்பாற்றிய மகா வீரர்' என்று புகழ்பெற வேண்டுமென்பது ஹோரின் ஆசை. அந்த ஆசையினால் அவர் என்னென்னவோ வேலைகளெல்லாம் செய்து வந்திருக்கிறார். "வெள்ளைத் திட்ட நிக்ரகன்'! என்ற பட்டம் பெறவேண்டுமென்பது துப்பறியும் புலி சர்ச்சிலின் ஆசை. இந்த இரண்டு பேருக்குமிடையே வெள்ளைக் கடுதாசித்திட்டம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறது. அதன் தவிப்பைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால்—

பிரிட்டிஷ் துணிகட்கு இந்தியா சலுகை காட்டவேண்டுமென்றும் அப்போதுதான் மாஞ்செஸ்டர் வர்த்தகச் சங்கம்போன்றவை வெள்ளைக்கடுதாசித் திட்டத்தை ஆதரிக்குமென்றும் பிரசாரம் செய்து மிஸ்டர் மோடி என்பவர் இந்தியா லங்காஷயர் வர்த்தக ஒப்பந்தத்தில் கை யெழுத்திட்டார். இந்தியா சட்டசபையிலும் பருத்தி பாதுகாப்பு மசோதா நிறைவேறியது. ஆனால் இப்போதோ சர்ச்சிலின் தூண்டுதலால் மாஞ்செஸ்டர் வர்த்தகச் சங்கம் 'ஜகா' வாங்கப்போகின்றது. அதாவது முன்னே வெள்ளைக் கடுதாசிக்குத் தந்த ஆதரவை வாபீஸ் வாங்கிக் கொள்ளப் போகிறது. அப்போதே இந்த மோடி என்பார் லங்காஷயர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தேசத்ரோகம் என நாம் குறிப்பிட்டோம். இன்று இனி இந்த ஒப்பந்தமும் அமுலில் இருக்கும். ஆனால் வெள்ளைக் கடுதாசிக்கு பிரிட்டிஷ் வர்த்தகர் தந்த ஆதரவும் பைஸலாகப் போகிறது. நிழல் பணியாரமும் போய் வாயிலிருந்த பணியாரத்தையும் இழந்த பிராணியைப் போல் இருக்கிறது இன்று மோடியின் நிலைமை ஐயோ பாவம்.

நிற்க, ஹோர்மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டபின் அவருக்கும் அவருடைய கோஷ்டிக்கும் என்னென்ன நெருக்கடிகளை சர்ச்சில் உண்டாக்குவானென்பதை தூரத்தினின்று பார்த்துக் கொண்டிருப்போம்.

"இனியொரு விதி செய்வோம்"

ராஜீய உலகில் இதுவரை இருந்த சோம்பலைத் தகர்த்தெறியும் காலம் அணுகிவிட்டது. சீக்கிரத்தில் மகாத்மாவின் மேற்பார்வையில் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் கூடப்போகிறார்கள். அந்தக் கூட்டத்தைத் தடைசெய்யப் போவதில்லையென அன்று சர்க்காரும் சட்டசபையில் கூறியிருக்கிறது. ஆகவே தேசத்தின் நாயகர்கள் கூடி நாட்டின் நிலைமையை ஆராய்ச்சி செய்து, புனருத்ஸாகம் ஊட்டுவதான வேலைத் திட்டங்களையும் வகுத்துத் தருவார்கள். சட்டமறுப்பை நிறுத்துவதாக மகாத்மாஜி சொல்லியதே போதுமாயினும், சம்பிரதாய முறைப்படி காங்கிரஸ் காரியக்கமிட்டியும் அத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளும்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியில் பண்டித ஜவஹர்லாலும், ஸர்தார் வல்லபாயும் அங்கத்தினர்களாவார்கள். இப்போது நடக்கவிருக்கும் கூட்டத்தில் இந்த தேச பக்த சிரோன்மணிகளும் இருக்கவேண்டியது அத்தியாவசியமென தேசத்தின் ராஜீய வாதிகள் கருதுகின்றார்கள். மேற்படி தலைவர்களைச் சிறையினின்று சமயத்திற்கு சர்க்கார் விடுதலை செய்தால்தான் அது சர்க்காருக்குப் பெருந் தன்மை. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஒரு அறிக்கையில், "எப்போது காந்தியடிகளின் அறிக்கை வெளியாயிற்றோ அப்போதே ஸ்ரீவல்லபாயும், ஜவஹர்லாலும், கான் அப்துல் கபூர்கானும் ஒரு நாள்கூட சிறையில் இருந்திருக்கலாகாது. இந்திய ஜனங்களோடு சமரசமாகப் போக சர்க்காருக்கு எண்ணமிருக்கிறதா என்பதை இதனின்றே அறியக்கூடும்" என்று கூறியிருக்கின்றார். இவ்விஷயத்தில் சர்க்கார் என்ன செய்யுமோ பார்ப்போம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடிய பின்பு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் கூடி தேச நிலைமையை ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று ஓர் எண்ணம் தேசத்தில் இருந்துவருகிறது. ஸ்பெஷல் காங்கிரஸ் கூடுவது ஒருவேளை அசாத்தியமாகத் தோன்றலாம். ஆனால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் கூடுவது அவ்வளவு சிரமமன்று. அந்த ஆலோசனையும் அநுசரிக்கப்பட வேண்டுமென்பதே நமது அபிப்பிராயம்.

ஆங்காங்குள்ள காங்கிரஸ் தொண்டர்களும் காங்கிரஸ் அன்பர்களும் இனி வேலை செய்யத் தயாராயிருக்கவேண்டுமென்பதை நாம் நினைப்பூட்டுகின்றோம். காங்கிரஸ்மீதுள்ள 'தடுப்பை' சர்க்கார் நீக்கிவிட்டால் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் முழு வேகத்தோடு காங்கிரஸ் சபைகள் வேலை தொடங்க வேண்டியிருக்கும். அந்த சுறுசுறுப்பான வேலைக்குக் கொடி நாட்டு விழா போல காரியக்கமிட்டி முதலில் கூடுகின்றது என்று நாம் கொள்ளலாகும்.

காங்கிரஸ்காரர்களுக்குள் இனி பிரிவினை இருக்கலாகாதென்றும், ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொண்டு அனைவரும் உழைத்து, காங்கிரஸுக்கு தேசத்தில் மகத்தான செல்வாக்கை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமென்றும் எல்லாத் தேச பக்தர்களும் ஒருமுகமாகக் கூறியிருக்கின்றனர். "ஒற்றுமை வழி ஒன்றே வழி!" என்ற வரிகளை நினைவில் வைத்துக்கொண்டு நாம் தேச சேவையில் ஈடுபடவேண்டும்.

தமிழ்நாடு சம்பந்தப்பட்ட மட்டில் ஆங்காங்குள்ள காங்கிரஸ் அன்பர்கள் நமது தாய்ச் சபையின் செல்வாக்கை உயிர்ப்பிப்பதற்கும், பிறகு அதைக் காப்பதற்கும் என்னென்ன செய்யலாமென்பதை இப்பொழுதிருந்தே ஆலோசனை செய்து வருவார்களாக. தேசத்தில் புத்துணர்ச்சி ஊட்டவேண்டியிருக்கிறது. சுதேசிய உணர்ச்சியைப் பலப்படுத்த வேண்டியிருக்கிறது. தேச பக்தியைக் கிராமங் கிராமமாகப் பிரசாரம் செய்யவேண்டியிருக்கிறது. இவை அல்ப சொல்பமான காரியங்களல்ல! தன்னலமற்ற ஆயிரக்கணக்கான தேச சேவகர்கள் இக்காரியத்துக்குத் தேவை. பழைய காங்கிரஸ் தொண்டர்களோடு புதியவர்களும் சேரவேண்டும். தேசமக்கள் அனைவரும் கூடி மீண்டும் நமது புனித நாட்டின் ராஜீய வாழ்வில் சுறுசுறுப்பு ஊட்டுவோம்! உழைப்போம்! காலத்திற்கேற்ற திட்டங்களை வகுத்துக்கொண்டு சுதந்திரக் கோயிலை நோக்கி நடப்போம்! தியாகம் சேவை இவ்விரண்டுமே நமது லட்சியங்களாகட்டும்!

செய்தியும் குறிப்பும்

மலை கல்லி எலி வந்தது!

இந்தியாவுக்குப் பொருளாதாரத் திட்டம் வரப் போகுது வரப் போகுது என்று காத்திருந்தோமே ஒரு வழியாக வந்து விட்டது. கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலை பிரொபஸரை ஒரு திட்டம் வகுத்துத் தரும்படி இந்திய சர்க்கார் கேட்டிருந்ததாம். ஆகவே இரண்டு நிபுணர்கள் இந்தியாவைச் சுற்றிப் பார்த்துக் குறிப்பெடுத்துக் கொண்டு சென்றார்களாம்.

இந்தியப் பொருளாதாரத்தை மேற்பார்வையிடுவதற்காக மூன்று வருஷத்துக்கு 30 லட்ச ரூபாய் செலவில் ஓர் ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டுமென அவர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். ஏதோ இப்போது உத்தியோகமின்றி அலையும் பட்டதாரிகள் சிலருக்காவது உத்யோகங்கள் கிடைக்கலாமல்லவா என்பது தான் நமக்கு இப்போது தோன்றும் ஆறுதல்!

அந்த டிபார்மெண்டார் நகரங்களிலுள்ள குடும்பங்களையும், கிராமங்களிலுள்ள குடும்பங்களையும் விசாரித்து தேசமக்களின் சராசரி பொருளாதார நிலையை நிர்ணயிக்க குறிப்புகள் எடுக்க வேண்டுமாம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒரு கணக்கு பசி தீர்க்குமா, தேசத்தின் கஷ்டம் போக்குமா என்று கேட்டு விடாதீர்கள்.

பறக்கவேண்டாம்!

"ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு ஏரோப்ளேன் நமது நாட்டில் இருக்கவேண்டும். அந்தக் காலத்தை சிருட்டிக்கவே உழைக்கின்றோம்" என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி சொன்னாராம். அமெரிக்காவில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு மோட்டார்கள் இருக்கவேண்டுமென்று லட்சியம் கூறப்படுகிறது. ஐயா! இந்தியராகிய எங்களுக்கு ஏரோப்ளேனும், மோட்டாரிலும் ஆசையில்லை. ஒவ்வொருவனும் சோற்றுக்குப் பறக்காமல் வாழ்ந்தால் அதுவே போதுமானது.

கதரை அணியுங்கள்

வைரமும் கண்ணாடியும்

'ஜவஹர்' என்றால் வைரம் என்பது பொருள். இந்திய மக்களுடைய அந்த வைரத்தைப் பார்த்து இன்றைக்கு ஒரு கண்ணாடித் துண்டு கேலி செய்கிறது. வைரம் வைரம் தான். கண்ணாடித் தூள் கண்ணாடித் தூளே. இந்தக் கண்ணாடித் தூள் யார்? எப்போதும் உத்தியோக வேட்டையாடிக் கொண்டும், ஊர் ஊராய்ப் பறந்து கொண்டும், பதினெட்டு பென்ஸ் விகிதத்துக்கு தலையசைத்துக் கொண்டும் திரியும் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் என்பவர் தான் அந்தக் கண்ணாடித் துண்டு.

கும்பகோணத்தில் ஒரு கூட்டத்தில் இந்த ராமசாமி என்ற கண்ணாடித் துணுக்கு நமது ஜோதித் தலைவனான ஜவஹரைத் தாக்கி சில வார்த்தைகளைச் சொல்லி யிருக்கிறது.

"எந்த விதமாகப் பார்த்தாலும் இந்தியாவில் மிக ஆபத்தான மனிதன் ஜவஹர்லால். தனக்குத் தானே மனக்கனவு கண்டுக் கொண்டு அலையும் மனிதன். அவருடைய அபிப்பிராயங்கள் பொது மக்களுக்கு ஏற்றதன்று. பொது ஜனங்களுக்கு ஜவஹர் பிரதிநிதியுமல்ல" என்பது ராமசாமியின் வார்த்தைகள்.

இந்த ஸி. பியின் வார்த்தைகளுக்குப் பதில் தருவதற்கு இன்றைக்கு ஜவஹர்லால் வெளியே யில்லை. ஏதோ ஓர் சிறைக்கூடத்தில் — விசிறி கிடைத்ததோ இல்லையோ— அவர் கிடந்து கொண்டிருக்கிறார். பொது ஜனங்களுக்காக உழைத்தன் பயனாக அவருக்கு சிறைக்கூடம் லபித்தது. 'பொது ஜனங்களுக்கு ஜவஹர் பிரதிநிதி யன்று' என்று ஒரு ஸி. பி. ராமசாமி அய்யர் மட்டும் சொல்லிக்கொண் டிருக்கட்டும். ஏனெனில் ஸர். ஸி. பி. நமது, பொது ஜனங்களில் ஒருவரன்று. 'அவருக்குப் பிரதிநிதி' என்று சொல்லிக் கொள்ளக்கூட யாரும் ஆசைப் பட மாட்டார்கள்.

'ஆபத்தான மனிதன் ஜவஹர்லால்' என்கிறார் ஸர். ஸி. பி. ஆம். ஜவஹர்லால் இந்த ஸி. பி. போன்ற குலாம் கூட்டத்தினருக்கு ஆபத்தான மனிதன் தான். 'தனக்குத்தானே மனக்கனவு காண்பவர்' என்று இனமாக ஒரு நற்சாட்சிப் பத்திரத்தையும் தந்திருக்கிறார் ஸி. பி. இந்த உலகில் முதலில் எதுவும் கனவாய்த்தா னிருக்கிறது. பிறகுதான் நனவாகின்றது. சுயநலமின்றிப் பொதுஜன சேவையில் வெறுங் கனவுகளைக் காணும் அந்த மகான், தன் வயிறே பெரிதென நினைத்து சுயநலப் பிண்டமாய் அலைகின்றவனைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவனென்பதை ஸி. பி. என்ற கண்ணாடித்துண்டு அறிந்து கொள்ளட்டும். சிறையிலிருந்தாலும், வெளியே யிருந்தாலும் வைரம் வைரம்தான். மோட்டாரில் பளிச் சிட்டுக்கொண் டிருந்தாலும் கண்ணாடித்துண்டு கண்ணாடித்துண்டுதான்.

காலணாத் தீப்பெட்டி

இத்தனை பத்திரிகைகள் கூச்சலிட்டதன் பயனாகவும், எல்லாத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டதன் பயனாகவும் தீக்குச்சி அதிக-வரி-தீர்மானத்தில் சிறு மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று அஸெம்பிளி தனிக் கமிட்டி சிபார்சு செய்திருக்கின்றது.

வெளிநாடுகளிலிருந்து 'பெட்ரோல் லைட்னர்' என்ற சாமான் இறக்குமதியாகித் தீக்குச்சித் தொழிலை அடியோடு கொன்று விடுமே யென்று 'சங்கில்' எழுதியிருந்தோம். அந்நிய நாடுகளினின்று இறக்குமதியாகும் இந்தக் கருவிகளைக் குறைப்பதற்கு ஒரு மசோதா கொண்டு வரவேண்டுமென மேற்படி கமிட்டியார் சிபார்சு செய்திருப்பது முதலில் கவனிக்கத் தக்க விஷயம்.

காலணாவுக்கே ஒரு தீப்பெட்டி வீதம் விற்கப்பட வேண்டு மென்று கட்டுப்பாடு செய்ய சில ஆலோசனைகளையும் மேற்படி கமிட்டி சொல்லி யிருக்கிறது. 40 தீக்குச்சிகள் அடங்கிய தீப்பெட்டியின்மீது குரோஸுக்கு 1 ரூபாய் வீதம் சிபார்சு செய்கிறார்கள். இதுவும் அதிகமானதென்று தொழிலில் அநுபவமுடையவர்கள் சொல்வதை நாம் குறிப்பிட வேண்டி யிருக்கிறது.

எல்லாவற்றையும்விட முக்கியமான சிபார்சு என்னவெனின், குடிசைத் தொழிலாக தீக்குச்சித் தொழில் பரவி யிருக்குமிடங்களில் அதிக வரி வசூலிக்கக்கூடாதென்பது மேற்படி கமிட்டியின் சிபார்சு. பெரிய பெரிய 'பாக்டரி'களைப்பற்றியும், பெரிய முதலாளிகளைப் பற்றியும் நாம் கவலைப்படவில்லை. சிவகாசி, ராமனாதபுரம் முதலிய இடங்களில் சிறு முதலோடு ஆரம்பிக்கப் பட்டுள்ள தீக்குச்சித் தொழிற்சாலைகளைப் பற்றியே எல்லோரும் கவலைப் பட்டோம். குடிசைத் தொழிற்சாலைகளுக்கு அதிகவரி யில்லையென்று நிச்சயமாகி விட்டதானால் மூடியுள்ள மேற்படி தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்படுமல்லவா?

சுதந்திரத்துக்காக

நமது ஸ்வராஜ்யக் கிளர்ச்சியில் முக்கியமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய தேதிகள் பின்வருமாறு:—

1929 டிஸம்பர் 31, நள்ளிரவு.	லாகூர் காங்கிரசில் பூர்ண ஸ்வராஜ்யத் தீர்மானம் நிறைவேறிற்று.
1930 மார்ச் 12.	தண்டி யாத்திரைக்கு ஸ்ரீ மகாத்மா புறப்பட்டார்.
1931 டிஸம்பர் 31.	ஸ்ரீ மகாத்மா சீமையி னின்று வந்ததும் மீண்டும் சட்ட மறுப்புத் தொடங்கு மாறு அ. இ. கா. கமிட்டித் தீர்மானித்த தினம்.
1933 ஏப்ரல்	மகாத்மா எரவாடாவி னின்று விடுதலை யடைந்துப் பொதுஜன சட்ட மறுப்பை நிறுத்துகின்றார். பூனா மகா நாடு. தனி 'ஹோதா சட்ட மறுப்புத் தொடக்கம்.
1934 ஏப்ரல் 2.	சட்ட மறுப்பை முற்றிலும் நிறுத்தி உரிமையை மகாத்மாஜி மட்டும் வைத்துக் கொள்கிறார். ஸ்வராஜ்யக் கட்சி புனர் ஜனனம்.

ஹாட்டுப் பிச்சையா?

இந்தியாவில் கொழுத்த சம்பளங்கள் வாங்குகிறவர்கள் யாரென்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. வெள்ளை வர்த்தகச் சங்கம் ஒரு சுற்றறிக்கையைத் தனது கிளைஸ்தாபனங்களுக்கு அனுப்பியிருக்கிறதாம். புதிய அரசியல் வந்தால் சட்டசபையில் அமரக்கூடிய 4 வெள்ளை மெம்பர்களுக்கும் தலா வருஷத்துக்கு 24 ஆயிரம் சம்பளம் கொடுக்க வேண்டுமாம். அப்போதுதான் வெள்ளைக்காரர் கட்சியைப் பற்றி வாதிக்கத் திறமை சாலிகள் ஏற்படுவார்களாம். இதற்காகவும் இன்னும் இதர செலவுகளுக்காகவும் லட்சத்து இருபதாயிரம் ரூபா பணம் வேண்டுமென்று கேட்கப்படுகிறதாம். ஒரு சம்பளமும் வாங்கிக் கொள்ளாமலிருக்கும்போதே வெள்ளை அங்கத்தினர்கள் சட்டசபையில் அமளி செல்கின்றார்கள். இன்னம் சம்பளமும் தந்து அனுப்பிவிட்டால் சட்டசபை அவர்களுக்கே சொந்த வீடு போல நினைத்துக் கூச்சலிடுவார்களென்பதில் ஐயமில்லை.

வெள்ளை வர்த்தகர்கள் என்னென்ன முன்னேற்பாடுகள் செய்து கொள்கின்றார்களென்று இதனின்று தெரிகிறது அல்லவா?

நூறு காரணங்கள்!

நப்போலியனுடைய தளகர்த்தர்களில் ஒருவர் தான் ஓரிடத்தை முற்றுகையிட வேண்டிய அவசிய மேற்பட்டதற்காக நூறு காரணங்களை வரிசையாகச் சொன்னாராம்.

"99 காரணங்களும் அனாவசியம். ஒன்றே போதும்!" என்றானும் நப்போலியன். அதாவது "எங்களிடம் பீரங்கிக்கு மருந்தில்லையே நாங்கள் வேறு என்ன செய்வது?" என்பதே அந்தக் காரணம்.

அதே மாதிரி இப்போது இந்தியாவில் வெள்ளை அறிக்கைத் திட்ட அரசியலை நுழைத்தே தீரவேண்டுமென சாமுயேல் ஹோர் சீமையில் பிரமாத பிரசாரத்துக்கு ஆரம்பித்திருக்கிறார். இந்தத் திட்டம் உதவாக்கரைத்திட்டம் என்பதை நிரூபிக்க 100 காரணங்கள் காட்ட வேண்டியதில்லை. ஸாமுயேல் ஹோர் காட்டுகின்ற இந்த சிரத்தையே போதுமான காரணம் ஆகும்.

சோற்றுக்கு வேட்டை

தோண்டன்:-"அப்பாடா!" என்று வீட்டில் வந்து உட்காருகிறான்.

மனைவி:—என்ன அப்பாடா. அப்பாடாவாம் சோத்துக்கு வழியைக் காணும். ஐந்து குழந்தையை பெத்ததில் குறைச்சலில்லை. ரொம்ப வேலை செஞ்சுட்டு வந்திருக்காப்பலேருக்கே.

தோண்டன்:-பொறுத்துக்கோ அவசரப்படாதே. இப்போதான் காந்திஜீ ஜெயிலுக்கு போக வேண்டான்னு சொல்லியிருக்கிறார். ஏதாவது வேலை பார்க்கலாம். காங்கிரஸ்காரன் என்றால் வேலைக்குக்கூட ஒத்தரும் வச்சுக்கிறதில்லை. இனி அந்த பயமில்லை. ஒரு வாரம் பத்து நாள்ளே ஏதாவது வேலை கிடைக்கிறதா பார்க்கலாம் அதுவரையில் கஷ்டப்படத்தான் வேணும்.

மனைவி:—கஷ்டப்பட வேணுமாம். ஒங்களை வாழ்க்கைப் பட்டதுக்கு கஷ்டப்படாமல் என்ன பண்ணுகிறது? இப்பொதான் எங்கே போனாலும் வேலையில்லை வேலையில்லை என்றாளாமே. எந்த வியாபாரம் எடுத்தாலும் நஷ்டம் எங்கிறாளாமே. உங்களை பார்த்து யார் வேலை தரப்போரா? ஜெயிலுக்கு தொலஞ்சேளே அப்போ தேவலை போலேருக்கு. அப்பொ இவ்வளவு கஷ்டப்படலேன்னா யாராவது ஏதாவது ஒத்தாசை பண்ணிட்டிருந்தா. ஒரு வேளைச் சாப்பாடு சாப்பிட்டுண்டு அக்கடான்னு இருந்தேன்.

குழந்தைக்கு வேரே நகை பண்ணனும் என்ன செய்யப் போரேளோ.

தோண்டன்:—(மனைவியின் உறுமலுக்கு பயந்துகொண்டு மனதிற்குள்) "சோத்துக்கு வழியைக் காணோம் நகை வேணுமா தலை எழுத்தே".

சிறிது நேரம் யோஜனை செய்து விட்டு "ஒரு வேலையும் கிடைக்கா விட்டால்—"

மனைவி:—"கிடைக்கா விட்டாலா" என்ன.

தோண்டன்:—ஒரு வழி கண்டு பிடிக்கிறேன். ஒரு மடாதிபதி பின்னாலே எல்லாரும் போய்விடலாம். போனவிடத்தில் இரண்டு வேளை சாப்பாடு நிச்சயம். மரத்தடியில் எங்கேயாவது தூங்கலாம். இனி குழந்தையும் வேண்டாம்.

மனைவி:—அதுக்கு தைரியம் வேண்டாமா: உங்களுக்குத்தான் வெக்கம் பூந்துக்கிறதே பெண்டாட்டி குழந்தைகளை அழைச்சிண்டு ஒரு இடத்துக்கும் போகப்படாதே.

தோண்டன்:—ஜலம் தலைக்குமேல் போனால் சாண் போனால் என்ன. முழம் போனால் என்ன. யோக்கியமாய் ஏதாவது வேலை கிடைக்குமான்னு பார்க்கிறோம். ஒன்றும் கிடைக்கவில்லை யென்றால் வேறே யென்ன செய்கிறது. மடாதிபதிகளோடு போனால் நல்ல சோம்பேறியாகலாம்.

மனைவி:—நம்மைப் போலே மிச்ச பேரும் வந்துட்டா அவர் என்ன பண்ணுவார் பாவம்.

தோண்டன்:-அதைப் பத்தி நமக்கு என்ன கவலை. அது அவர் கவலேன்னா; பிக்ஷை போடுகிறவன் கவலேன்னா—

ஒளி மைந்தன்!

(சங்கு. ஸுப்ரஹ்மணியன் எழுதியது)

அவனுக்கு ஒளி தோன்றிவிட்டது. ஓடி யொளிய அவன் விரும்பவில்லை. உலகோடு கூடிக் குலாவுவதற்கும், தான் கண்ட ஒளியின் உண்மைகளைப் பறையடிப்பதற்கும் அவன் ஆசைப்பட்டான். ஓடோடியும்வந்தான். புதிய ஆளென்றால் கூட்டம் சேர்வதற்கென்ன பஞ்சமா? சேர்ந்தார்கள். அவனுடைய பேச்சைச் சில நிமிஷங்கள் வரை அமைதியாகக் கேட்டார்கள்.

"உலகில் சகதியும் சேறும் அதிகமாகிவிட்டதே. இந்தச் சகதியை இறுகச் செய்து கல்லாக்கி மாளிகைகளாகக் கட்டிப் போடுவோம். மனித வாழ்வு எப்போதும் போர்க்களமாக இருக்க வேண்டுமா? அதை அன்பெனும் இன் பத்தோட்டமாக ஆக்கிடுவோம். தோழர்களே! செடியில் முக்கியமான பாகம் அதன் முள் அன்று. அதன் நடுவே செக்கச்செவே லென்று இருக்கும் ரோஜாவைத்தான் நாம் கவனிக்க வேண்டும். அது காட்சிக்கு அழகு; கருத்துக்கு நறுமணம்" என்று கவிதையும் ஞானமும் கலந்து சொரிய ஆரம்பித்தான்.

ஆனால் இந்தப் பேச்சு மார்க்கட்டில் எளிதில் எடுபடக்கூடியதா? அநேகருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. கூட்டத்தில் ஒரே ஒருவன் மட்டும் தனக்கு ஏதோ புரிந்ததாகத் தலையசைத்துக் கொண் டிருந்தான். நடுவில் அவன் எழுந்து பிரசங்கியிடம் கூறினான்.

"ஐயா! என்ன அழகாகப் பேசுகின்றீர்கள்! என்ன உபமானங்கள்! என்ன ஜோடிப்பு. ஆனால் இத்தனை பேச்சும் இந்தக் காலத்தவருக்கு உபயோகமில்லையே. இன்னும் நூறு வருஷத்துக்கு அப்பால் பிறந்திருந்தால் உங்களை உலகம் எவ்வளவோ கொண்டாடும். என்ன செய்ய? ஹூம். அவசரப்பட்டு பிறந்த மகான்களில் நீரும் ஒருவர்" என்று கூறினான். அங்கிருந்த சபையின் சிரத்தையும் அந்த ஒரு மனிதனின் சொற்களும் பிரசங்கியின் மனதைத் தைத்தன. அவன் எங்கேயோ ஓடி ஒளிந்தான்.

சோம்பரில் முழுகிக்கொண் டிருக்கும் உலகுக்கு 'உணர்ச்சி' ஊட்டுவதில் தப்பு உண்டா என்று அவன் சோதனை



செய்துபார்த்தான். சரி. இனி உலகுக்கு சொல்ல வேண்டியவைகளை மாற்றிச் சொல்லிப் பார்ப்பதென்று முடிவு செய்து கொண்டான். கண்ட கனவுகளை யெல்லாம் மீண்டும் மனத்தில் நெய்துகொண்டு திரும்பி வந்தான். 'தற்காலத்தின் புதல்வன் யான்' என்பதை நிரூபிக்க அவனுக்கு ஆசை. ஆகவே புதிய ஆதர்சத்தை ஏந்திக் கொண்டு அவன் கூட்டத்தை நோக்கி ஓடிவந்தான். இப்போதும் முன்னைப் போலவே கவிதையும் ஞானமும் கலந்து பேசினான். வார்த்தைகளெல்லாம் புத்தப் புதிசா யிருந்தன.

ஊருக்குப் புதிதாய் வந்திருந்த அவன் ஸ்வரூபத்துக்குச் சிறிது நேரம் தான் கூட்டத்தினர் மதிப்புத் தந்தனர். அவன் பேச்சு அவர்களுக்குப் புரியவே யில்லை. ஆனால் அக்கூட்டத்திலும் ஒரே ஒருவன் மட்டும் விஷயத்தை அறிந்துகொண்டதாகத் தலையசைத்துக் கொண்டிருந்தான். அவன் பிரசங்கியை நோக்கிக் கூறினான்.

"ஐயா! என்ன மேன்மையான கருத்துக்கள். என்ன உபமேயங்கள்! என்ன கோர்வை! ஆனால் இத்தனை பேச்சும் இந்தக் காலத்துக்கு உபயோகமில்லை. ஐயா! நீங்கள் நூறு வருஷத்துக்கு முன்னே பிறந்திருக்க வேண்டும். அந்தக் காலத்து மனிதர்கள் நல்லவர்களாயும் யோக்யர்களாயும் இருந்தார்கள். உங்கள் அழகான பேச்சை அவர்கள் புரிந்துகொண் டிருப்பார்கள்! நீங்கள் நூறு வருஷம் 'லேட்'! இந்தக் காலத்தில் வந்து பிறந்தீர்களே!" என்றான் அவன்.

அந்த ஆதர்ச புருஷன் என்ன செய்வான் பாவம்! முன்னே நூறு வருடம், பின்னே நூறுவருடம்! இந்த இருநூறு வருஷத்திற்கு நடுவே எக்கச்சக்கமாக, தான் அகப்பட்டுக்கொண்டு தத்தளிப்பது போலவே அவனுக்குப் பட்டது. அவன் ஒளி மைந்தன். அவன் ஒளியைப் பரப்ப முயன்றால் அக்காந்தியை உணர உலகம் முற்படமாட்டேனென மறுக்கிறது. புரிந்தவர்போலப் பேசுவர்களும் நூறு வருஷங்களுக்கு அப்பாலோ இப்பாலோ அந்த மகானைத் தள்ளிவைத்துப் பேசுகின்றார்கள். கவி, ஞானி, சத்தியதூதன் இவர்களுடைய வாழ்க்கை எப்போதும் இப்படித்தான் இருக்கவேண்டுமோ? எங்கேயோ படித்த உதாரண ஞானியைப் பற்றி சொல்லியாகிவிட்டது. தோலும் எலும்புமாய் நமது கண்ணுக்குமுன் உள்ளவரைப் பார்ப்போமா?

"இவ்வுலகில் எல்லோரும் சமமாக வாழ்வோம். பிரிவினைகள் வேண்டாம். நிறத்திமிரை தகர்த்தெறியுங்கள். ஜாதிக் கொடுமைகள் வேண்டாம்" என்றார் காந்தி.

"விஷயம் நல்லதுதான்! ஆனால் இது நூறு வருஷங்களுக்கு அப்புறம்தான் சாத்தியம். தற்காலத்தில் திமிராவது போகவாவது, ஜாதியாவது சமத்வமாவது? காலத்திற்கு ஏற்றதன்று" என்கிறான் விஷயம் அறிந்தவன்போல அபிநயிக்கும் ஒருவன். காந்தி கொஞ்சகாலம் மறைகின்றார். தீர்க்காலோசனை செய்து தமது எண்ணங்களுக்குப் புது மெருகு கொடுத்துக் கொண்டு மீண்டும் வந்து நிற்கின்றார்.

"நாமனைவரும் ஒரே அப்பனின் பிள்ளைகள். அந்த அப்பனே கடவுள். நமக்குள் இத்தனை பிரிவு இருக்கலாமா?" என்று கூவுகின்றார்.

"கடவுளா? இந்தக் காலத்தில் தெய்வப் பேச்சு எடுபடுமா? நூறு வருஷத்துக்கு முன்னே இவர் பிறந்திருக்க வேண்டும். அப்போதெல்லாம் தெய்வ பக்தர்கள் இருந்தனர். இனிமேல் நாஸ்திகம் தான் எடுபடும்," என்கிறான் விஷயம் அறிந்தவனெனத் தலையசைக்கும் வேறொருவன். இத்தகைய அபிப்பிராயங்களுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களுக்கும் ஆசைப்பட்டா ஒளிமைந்தர்கள் வந்து நிற்கின்றார்கள்! என்ன பேதமை!

ஞானியும், கவியும் 'காலம்' பெற்றெடுத்துத் தரும் தவப் புதல்வர்கள். ஆனால் அந்தப் புதல்வர்களை முற்றிலும் அறிந்துகொள்ள உலகம் அசிரத்தை காட்டுகின்றது. ஆனால் சோர்வு, வீழ்ச்சிகளைப் பற்றிக் கருதாதவர்களே ஞானியும், கவியும்—இரு அம்சமும் கலந்துள்ள காந்தியும்!

நம் நாட்டில் எப்போது?

(யோகி எழுதியது)

அஃதோர் எழுத்து வாசனையே அறியாத மட்டித் தேசமா யிருந்தது. அங்கே ஒரு பெரும் அரசியல் மாறுதல் ஏற்பட்டது. இப்போது பல பெரியோர்கள் அத்தேசத்தைக் கல்விக் களஞ்சியமாகவும், காவியச் சோலையாகவும் நிர்மாணிக்கப் பெரு முயற்சி செய்கிறார்கள். அந்நாட்டுக் கல்விக் கழக அதிகாரிகளில் ஒருவரான டாக்டர் சாட்ஸ்கி என்பவர் 'இன்னும் 5 வருஷத்தில் எங்கள் நாடு கல்வித் துறையில் என்னாட்டினும் முன்னாட்டும் நன்னாடாய் விளங்கும்' என்று மார் தட்டுகிறார்.

அவர்களுடைய கல்விக் கழகம் 3 வகையாக வகுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தலைமை ஸ்தாபனம், மாகாண ஸ்தாபனம், ஜில்லா, தாலூகா ஸ்தாபனங்கள். ஒவ்வொரு ஸ்தாபனமும் 5 பிரிவுகளை உடையது.

அவைகளின் தொழில்கள் வருமாறு.

1. பள்ளிக்கூடங்கள் அமைத்தல்
2. பாடப் புஸ்தகங்களின் நிர்மாணமும், நியமனமும்.
3. பொதுஜன ஊழியம்.
4. பொருளாதார வருவாயும், வசதியும்.
5. கல்வியின் அமைப்புகளை வகுத்தல்.

இதில் சேவை செய்வோனுக்குக் 'கல்வி வீரன்' என்று பெயர். அவனுக்கு மெடல்களும், பொத்தான்களும் பரிசளிக்கப் படுகின்றன.

நாம் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதாக வைத்துக்கொள்வோம். முதலாவது சில ஆயிரமாவது நமது கையில் ரொக்கமாக வேண்டும். அதற்குமேல் கட்டிடம், மேஜை—நாற்காலி—பெஞ்சுகள், இதர தட்டுமுட்டுகள், குறைந்த பட்சம் 5 டஜன் பிள்ளைகள்—இவ்வளவாவது இல்லாவிடில் நம்மால் ஒன்றுமே செய்ய முடிவதில்லை. ஆனால் அத் தேசத்திலோ தொழிற்சாலைகள், வயல் வெளிகள், சேனைக்களங்கள்—பொதுவாக—நினைத்தபோது நினைத்த இடத்தில் தங்களது பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து விடுவர். 3 பேர் இருந்தால் போதும்; உடனே பாடசாலை ஆரம்பித்து விடலாம். கல்விக் கழகங்கள் ஜனங்களின் கல்வியற்ற தன்மையின் ஆழத்தை அளவெடுத்து, அவ்வளவிற்கு ஏற்பத் தங்களுடைய காரியங்களை ஒழுங்கு செய்கின்றன. பொது ஜனங்களும் அவர்களுக்கு பெரிய ஆதரவு தருகிறார்கள்.

பணக்கஷ்டம் என்கிற பேச்சே கிடையாது. கல்விக் கழகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு சிறு கட்டணம் செலுத்தவேண்டும். வாத்யார்களுக்குச் சம்பளம் இல்லை; எல்லோரும் இலவச ஊழியர்கள் தான். பிள்ளைகளுக்கும் சம்பளம் கிடையாது. புஸ்தகம் ஸ்லேட் முதலியவைகளும் இலவசமாய் வழங்கப்படுகின்றன. தொழிற்சாலைகளும், பொது ஸ்தாபனங்களும் இச்சேவைக்கு உதவி செய்கின்றன.

இப்பள்ளிக்கூடங்களில் 15 வயது இளைஞர் முதல் ஐம்பதுஞ்சென்ற கிழவர்கள் வரை படிக்கின்றனர். படிப்பற்றவர்கள் பெரும்பாலும் பெண்களா யிருப்பதால் அவர்களிடையில் இவ்வேலை மிகவும் தீவிரமாய் நடைபெறுகிறது. வீட்டு வேலைகளால் வெளிவர முடியாத மாதர்களுக்குப் பொதுநல சேவகிகள் வீடுதோறுஞ் சென்று பாடம் போதிக்கின்றனர். வாத்யார்களாய் வருவோர் நன்கு படித்தவர்களாயும், படிப்பு முறைகளிற் தேறியவர்களாயும் இருக்கிறார்கள்.

சாதாரணமாக இக்கலாசாலைகளில் எழுதப் படிக்க மட்டும் சொல்லித் தருவதில்லை. இலக்கணம், கணிதம், சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களும் நடக்கும். ஒருவன் வாசிக்கத் தெரிந்தவன் என்று அத்தாட்சிப் பத்திரம் வாங்குவதற்கு குறைந்த பட்சம் 18 மாதமாவது இப்பள்ளிக்கூடத்தில் படித்தாக வேண்டும். இக் கல்விக்கழகத்தின் தலைவரான காலினிகி சொல்லுகிறார்.

'இப்போதுள்ள ஸ்திதியில் எழுதப் படிக்கச் சொல்லித் தருவது என்ற அவ்வளவோடு நின்றுவிடுவதால் பயனில்லை. படித்தவைகளை அர்த்தம் செய்து கொள்ளவும், அர்த்தமானவைகளை அறிவினால் ஆராய்ந்து பார்க்கவும், அதனால் அரசியல் அறிவு முதிர்ச்சி யுறவும், ஒரே வார்த்தையில் புது மனிதர்களாக அவர்களை சிருஷ்டித்து விடவும் லாயக்குள்ளதாக நமது கல்விமுறை திகழவேண்டும். மனிதர்களை புதியவர்களாக்கிப் புனிதம் செய்யாத படிப்புப் பயனில்லை.'

தவிறப் பொது ஜனங்களுக்குக் கல்வியின்மேல் ஒரு பெரிய ஆர்வத்தை உண்டாக்குவதற்காக அத்தேசத்தில் பலவிதமான பிரசாரங்கள் நடைபெறுகின்றன. காட்சிச் சாலைகள், வளைய வரும் வாசகசாலைகள், சங்கங்கள், பிரசங்கங்கள், வாதங்கள்—இவை யாவற்றிற்கும் மேல் சுவர்களிற் தொங்கவிடப் படும் பெரிய அளவுள்ள சமாசாரப் பத்திரிகைகள் முதலிய யாவும் மக்களது கல்வி ஆசையைப் பெருவாரியாகத் தூண்டி விடுகின்றன.

அத்தேசத்தின் கல்வி வளர்ச்சியைச் சில புள்ளி விவரங்களோடு காட்டுகிறோம்.

வருஷம்		எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தொகை நூற்றுக்கு
1897	....	28·9
1920	....	44·4
1926	....	52·8
1931	....	73·6

சென்ற பத்து வருஷத்திற்குள் படிப்பவர்களின் தொகை அந்தத் தேசத்தில் 3 மடங்கு அதிகமா யிருக்கிறது.

1921-22	456,000
1926-29	1,554,000
1931-32	13,631,000

பார்த்தீர்களா அறிவு செல்லும் வேகத்தை! இவ்வளவும் எந்த நாட்டில் நடக்கிறது என்று அறிய நீங்கள் ஆசைப்பட வில்லையா? ஆனால் இதற்குள் நீங்களே தெரிந்து கொண்டிருக்கலாம். இவ்வளவு தீவிரமான முன்னேற்றம் ஒரு புதிய யுகத்தையே சிருஷ்டி செய்துவரும் ரஷ்யாவி லல்லாமல் வேறு எங்கு நடக்க முடியும்? ஏ! ரஷ்யாவே! உன்னைப் பார்க்கும் போது ஏழை இந்தியனாகிய எனக்குப் பொறாமை உண்டாகிறது. நம் நாட்டில் இத்தகைய கல்வி ஏற்றம் எப்போது ஏற்படப் போகிறது?

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி

* * *

கேடுதீர்க்கும் அமுத மெம்மன்னை
கேண்மைகொள்ள் வழியிவை கண்டீர்.

யார் சளைத்தவர்?

வ. ரா.
எழுதிய
சிறு கதை

"என்ன, பித்துப் பிடித்தாற்போல, உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? இந்த மாதிரி, சதா காலமும் உட்கார்ந்து கொண்டிருந்தால், உன் உடம்பு என்ன ஆகும்? எத்தனை நாளைக்குப் பச்சைக் குழந்தையாக இருக்க முடியும் என்பது உன் எண்ணம்? நம்ம வீடு தவிக்கிற தவிப்பு, உன் கண்ணிலே படவே யில்லையா? அரிசியும் விறகும் இருந்தால்தானே, அடுப்பு பற்றி எரிய விடலாம்."

ஐம்பது வயதிருக்கும் ஒரு ஸ்திரீ இந்த மாதிரி சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் சொல்லிக் கொண்டிருந்தது அவளுடைய ஏக புத்திரனான கண்ணனிடம். கண்ணனுக்கு சுமார் இருபத்திரண்டு வயதிருக்கும். கண்ணன் தகப்பனார் இறந்து, சுமார் எட்டு மாத காலமாகிறது. இறந்து போன தகப்பனார் ஏதோ "சாகசக்கியம்" செய்து, தமது குடும்பத்தை நடத்தி வந்தார். அவர் இறந்த பிறகுதான், அந்தக் குடும்பம் நடக்க எப்படி சாத்தியமாயிற்று என்று அவருடைய மனைவி, கண்ணனுடைய தாயார் தெரிந்துகொண்டாள்.

கண்ணனுக்கு மூன்று தங்கைகள். ஒருவளுக்கு மட்டும் கலியாணமாகியிருந்தது. மற்ற இரண்டு பெண்களுக்கும் முறையே பன்னிரண்டு, பதினைந்து வயதிருக்கலாம். சாப்பாட்டுக்கு வழி தெரியாத குடும்பத்திலே, கலியாணப் பேச்சு நடமாடும் என்று எதிர்பார்க்க முடியுமா? என்றாலும் அந்தப் பேச்சும் இடைஇடையே, தலையை நீட்டிக் காண்பித்துக்கொண்டே யிருந்தது.

கண்ணனை, அவனுடைய தகப்பனார் எப்படியோ படிக்க வைத்து விட்டார். "நான்தான் எழுத்து வாசனையில்லாத 'தற்குறி'யாகி விட்டேன். அந்த அபவாதம் உனக்கும் வர வேண்டாமப்பா. எவன் காலில் விழுந்தாவது, உன்னைக் கடைசி வரையிலும் படிக்க வைத்து விடுகிறேன். பிறகு உன் பாடு, உலகத்தின் பாடு. தற்குறி அவமானம் உனக்கும் வர வேண்டாம். அந்தப் பரம்பரைப் பெருமை உனக்கு வேண்டாம்" என்று நொந்துகொண்டே, கண்ணனுடைய படிப்புக்கான வசதிகளை, அவன் தகப்பனார் தேடி வைத்தார்.

கண்ணன் பீ.ஏ.யும் தேறினான். பீ.ஏ. பட்டம் பெற்றால், வீட்டு வாசலுக்கு உத்தியோகத்தைக் கொண்டு வந்து கொடுப்பார்கள் என்று பாப்பா பாட்டி சொன்னதுதான் கண்ணன் தாயாருக்கு வேத வாக்கியம்.

உத்தியோகம் வருகிற வேடிக்கையைப் பார்க்க, வாசலுக்கு எத்தனையோ தரம் வந்து, ஒருவர் கண்ணிலும் படாமல், கண்ணன் தாயார் எட்டி எட்டிப் பார்ப்பாள். (அவள் ஒரு வருஷம் ஆகாத விதவை யல்லவா?) உத்தியோகம் வருவதைக் காணவில்லை. "அம்மா, தாயே, பிச்சை போடு" என்ற தீனக்குரலும் அந்தக் குரல் கூட வெளிவர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் மெல்லிய உடல்களை தாங்கிய பிச்சைக்காரர்களும் தான், அவள் அனுபவித்த காட்சிகள். பக்கத்து வீட்டில், இந்தக் குரல் கேட்கும் போதே, வாயில் கதவை தாள் போட்டுக் கொண்டு, உள்ளே போய் "ஈசுவரா! அவன் தெருப் பிச்சைக்காரன்; நாங்கள் 'வீட்டு'ப் பிச்சைக்காரர்கள்" என்று அலுத்துக் கொண்டு சொல்லுவாள்.

கண்ணன் வேலைக்காக எவ்வளவோ பிரயத்தனப் பட்டுப் பார்த்தான். எல்லா விடங்களிலும் கிடைத்த பதில் ஒரே மாதிரியாகத்தானிருந்தது. நாஸ்தி (இல்லை) என்ற பதில் தான். இவர்கள் இந்த மாதிரி பதில் சொல்லச் சொல்ல, அவர்களுடைய பதிலோடு இன்னும் இரண்டு எழுத்துக்கள் ஒட்டிக் கொண்டு, அவனை ஆள் மாற்றிக் கொண்டே வந்தது. அதாவது அவன் "நாஸ்திகன்" ஆகும் நிலைக்கு வந்து விட்டான். "என்ன உலகமடா இது? வேலை செய்கிறேன் என்றால் வேலையுமில்லை; கூலியும் கிடையாது. கடவுளுடைய உலகத்தில், ஒரு உயிர் கூட பட்டினி கிடக்கலாமா? என்னைப் பற்றிக் கவலையில்லை. என் சிறு தங்கைகள்! அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் எங்கே போய், என்ன வேலை செய்வார்கள்? அட பாழான உலகமே!" என்று தவித்துத் தவித்து ஏங்கி, பழுத்த நாஸ்திகனாகி விடுவான் போலிருந்தது.

காட்டு மிருகங்கள் அடைபட்டுக் கிடக்கும் கூடா இந்த உலகம்? அவைகள் ஒன்றை யொன்று தாக்கி கொள்ளாமல் பார்ப்பதற்காகவா, அரசாங்கங்கள் இருக்கின்றன? பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கிறானமே நாராயணன்? என்ன வேடிக்கை! உலகம், அவன் காப்பதாக சொல்லும் உலகம், தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கும் காலத்தில், அவனுக்கு அரவணைத் துயில் என்ன வேண்டி யிருக்கிறது? என்ன கட்டுப் பாடான கற்பனை! இந்த கற்பனையைக் கேட்டால், செவிக்கும் இன்பம் இல்லை. வயிறும் காய்கிறது. என்ன கேவலமான வாழ்க்கை! எங்கே போனாலும் இல்லை என்கிற அழுகைக் குரலா? இந்த அழுகைக் குரலை வளர்ப்பதற்கா, அரசாங்கம், மதம், கட்டுப்பாடு? என்ன அநியாயம்" என்று தனக்குள்ளாகவே கண்ணன் பல தடவைகள் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

இதன் பயன் என்ன? அவனுக்கு யாரைக் கண்டாலும் ஒரே எரிச்சல். வேட்டை நாயைப்போல பாயும் உள்ளம் அவனுக்கு எப்படியோ வந்துவிட்டது. நல்ல உணர்ச்சிகள், கருத்துக்கள்—இவைகளுக்கு அவன் உள்ளம் அசையவில்லை. அது மரத்துப் போய் விட்டது.

இந்த ஸ்திதியில் அவன் இருக்கையில், அவன் தாயார் அவனிடம் சொன்ன வார்த்தைகளை, அவன் சும்மா தாங்கிக்கொண் டிருப்பானா?

"அம்மா! என் என் சதையைக் குத்திக்குத்தி, பிடுங்கி எறிகிறீர்கள்? வீட்டிலே நாளைக்கு அரிசி இல்லையென்பது எனக்குத் தெரியாதா? இப்பொழுது இருக்கும் உலக நிலைமையில், மோசடி, திருட்டு, அயோக்யத்தனம்,

பணக்காரனுக்கு சரணாகதி—இவைகள் செய்தால்தான், வயிறு பிழைக்கலாம் போலத் தோன்றுகிறது. இந்த வேலைகளில் நான் இறங்குவது, உங்களுக்குப் பிடித்தமா, சொல்லுங்கள். குற்றம் செய்தால்தான் பிழைப்பு உண்டு என்று நோட்டீஸ் போட்டு இருப்பதுபோல, இந்த நாட்டில் எங்கும் என் கண்ணில் படுகிறது. நான் அலையாத இடம் பாக்கியில்லை. நான் பார்க்காத பேர்வழிகள் பாக்கியில்லை. பிச்சை கேட்பதுதான் பாக்கி. நீங்கள் சொல்லுகிறபடி நான் கேட்கத் தயார்” என்றான் கண்ணன்.

“நீ தான் அதிசயமாய்ப் பேசுகிறாய். உனக்குத்தான் தனியான கௌரவம், யோக்கியப் பொறுப்பு எல்லாம் வந்திருக்கின்றன. லோகத்திலே எல்லோரும் பிழைக்கவில்லையோ? உன்னைப் போல பேசிக்கொண்டிருந்தால், அவர்கள் எப்பொழுதோ தொலைந்துபோய் இருப்பார்கள். நீதான் தர்ம சாஸ்திரம் வாய் நீளமாய்ப் பேசுகிறாய். தர்ம சாஸ்திரம் பேசிக்கொண்டிருந்தால், வயிற்றுப் பாட்டுக்கு வழி என்ன? உலகத்திலே நாலுந்தானிருக்கும். பொறுத்துக் கொண்டு போனால்தான், பிழைக்கலாம். கத்திக் கூர்வாய் மாதிரி, மனஸை வைத்துக்கொண்டிருக்கலாமோ” என்றாள்.

கண்ணனுக்கு இதைக் கேட்டதும், தாளமுடியவில்லை. வெடி குண்டினால், தூள்தூளாக வெடித்துச் சிதறிவிழும் மலையைப்போல, அவன் மனம்வெடித்துப் போயிற்று. முகத்தில் கைகளை வைத்துக்கொண்டு அவன் தேம்பித் தேம்பி அழுதான். “அம்மா, நீங்கள் கூடவா, இப்படிச் சொல்ல வேண்டும்” என்று உருப் புரியாமல், சொல்லிக் கொண்டே, அழுதான்.

பக்கத்தில் அவனது இரண்டு தங்கைகளும் இதைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அண்ணன் தேம்புவதைக் கண்டவுடன், அவர்களுக்கு ஆத்திரம். யார் பேரில்? அம்மாவின் பேரில்! கண்ணன் உள்ளம் கலங்கியதை, அவர்கள் பார்த்ததே யில்லை. மலை உடைந்தாலும் மனம் உடையாத கண்ணன் அழவே, “அம்மா! உங்களுக்குக் கொஞ்சங் கூட புத்தியில்லை. நம்முடைய அற்ப வயிற்றுப் பாட்டுக்காக, அண்ணாவின் மனச்சாட்சி அடியோடு தொலைந்து போகவேண்டும் என்று உபதேசம் செய்கிறீர்களே! ரொம்ப அழகு! எங்களுக்கு “கலியாணம் கார்த்திகை” ஒன்றும் வேண்டாம். நாங்கள், நெல் குத்தி, வீடு பெருக்கிப் பிழைக்கிறோம். உங்களுக்கும் அண்ணாவுக்கும் சாதம் போடுகிறோம். என்னப் பிரமாதம் வந்துவிட்டது? சாண் வயிறு கழுவுவதற்கு, ஈனத்தொழில் செய்ய வேண்டியதில்லை” என்று பெரிய தங்கை சொன்னாள்.

தேம்பி அழுத கண்ணனுடைய அழுகை திடீரென்று நின்று போய்விட்டது. அவன் முகத்தில் வெட்கமும் முத்து முத்தாய் வியர்வையும். “ஆகா! என்ன முட்டாளாய்ப் போனேன்? இந்தக் குழந்தைகளுக்கு இருக்கும் மனோதைரியம், படித்த முட்டாள் எனக்கு இல்லையே! பொறுப்பைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டிருப்பது போல எண்ணி ஏமாந்து போனேனே? நாராயணா! நீ பாற்கடலில் தூங்கு. என் அருமையான தங்கைகள் இருக்கிற உலகத்தில் உனக்கு வேலையில்லை. அவர்களைப் படைத்தபின், உனக்குப் பொறுப்பு வேண்டியதில்லை” என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு, “அம்மா! ருக்மணி! நான் அழுதது முட்டாள்தனம். நான் வேலை செய்கிறேன். என்னுடைய இரண்டு கைகள் வலுவற்றுப் போய்விட்டனவா” என்றான்.

“வேலை செய்வோம்; வேலை அகப்படவில்லை, பட்டினி கிடந்து சாவோம். அப்பொழுதாவது, இந்த உலகத்துக்கு புத்தி வருகிறதா, பார்ப்போம். ஏன், அண்ணா, நெஞ்சு கலங்கவேண்டும்? உழக்கு அரிசியும் முழத் துண்டும் இந்த உலகத்தில் நமக்குக் கிடைக்காமலாப் போகப் போகிறது? அதிக ஆசையினாலேதான், அதிகக் கஷ்டம்? நமக்கு எதற்காக அதிக ஆசை? ஆசைப்பட்டு, ஏமாறுகிற, ஏமாற்றுகிற கோஷ்டியில் நாம் ஏன் சேரவேண்டும்” என்றாள் மூத்த தங்கை. சின்னத் தங்கையின் முகம், இதைக் கேட்டு, ஆனந்தம் பொங்கிற்று. “என்னால் பத்து வீடு கூட்ட முடியும், அண்ணா” என்றாள் அவள்.

தாயார் திகைத்துப்போனாள். இவர்களுடைய புது உலகப் பேச்சு, அவளுக்கு அர்த்தமாகவே யில்லை. “வீடு கூட்டவாவது, பிழைக்கவாவது” என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, பிரமித்துப் போனாள். அவளுக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. அவள் அசையாத் தூண் ஆனாள்.

கண்ணன் உட்கார்ந்த நிலையில், கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருந்தான். தங்கைகள், வலையை அறுத்து எறிந்து, வேடனைப் பார்த்து நிற்கும் பெண் சிங்கங்களைப்போல, அட்டஹாஸப் பார்வையுடன் நின்றுகொண்டிருந்தார்கள். தாயோ, மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறாளோ, என்று சந்தேகம்.

காலடிச் சத்தம் கேட்டது. எல்லோரும், சொல்லிவைத்ததுபோலத் திரும்பிப் பார்த்தார்கள். வந்தது பக்கத்து வீட்டு செல்லம்மாள். செல்லம் என்று அவளுக்கு செல்லப் பெயர். அவளுக்கு வயது பதினாறு இருக்கும். கலியாணமாகவில்லை. கண்ணனுடைய தங்கைகள் அவளுக்குத் தோழிகள். கண்ணனை நேரே விழித்துப் பார்க்க முடியாத காதல் குற்றம் அவளிடமிருப்பதாக, தெரிந்தவர்களின் முடிவு. இந்த வீட்டில், எதிர்பாராத கூச்சல் கிளம்பியதும், அவள், “நல்ல பழக்கத்துக்கு விரோதமாக” தங்கள் வீட்டு மாடியிலிருந்து, இவர்களுக்குத் தெரியாமல், ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு மாடியில் இருப்புக் கொள்ளவில்லை.

விழுந்து அடித்து, இந்த வீட்டுக்கு ஓடி வந்துவிட்டாள். இவளைக் கண்டதும் காணாததுமாக, கண்ணன் முதலியோர், தங்கள் தாற்காலிக வேஷங்களை மாற்றிக்கொள்ள எத்தனித்தார்கள்.

“வேண்டாம்! வேண்டாம். உங்களுக்குப் பாசாங்கு வேண்டுமா? அம்மா! ருக்மணி, வீடுகூட்டப் போகிறபொழுது என்னை மறந்துவிடாதே! நீங்கள் வீடு கூட்டுகிறது! நான் உல்லாஸமாய், எங்கள் வீட்டு மாடியில், காலம் கழிக்கிறதோ! ரொம்ப பேஷ்” என்று தனது கடைக்கண் மூலமாய், ஒருதரம், கண்ணனை பார்த்தாள். கண்ணனுக்கு உடலில் ஆவியே இல்லை.

கதரையே

கட்டுங்கள்

"500 ரூபாய் சுகம்!"

(திப்பு எழுதியது)

சுகம் விலைக்குக் கிடைக்கிறதாகச் சொல்கிறார்கள். ஐயாயிர ரூபாய் பொறுமான சுகம் 500 ரூபாய்க்குக் கிடைப்பதென்றால் அந்த சந்தர்ப்பத்தை நழுவவிடலாமா? எத்தனையோ ரூபத்தில் சுகம் அவதரிப்பதுபோல இப்போது சுகமானது மோட்டார் ரூபத்தில் எனது வீட்டு வாசலில் வந்து நின்றது.

வீட்டில் புதிய குழந்தை யொன்று உதித்தால் நண்பர்களெல்லாரும் வந்து நமது சந்தோஷ நிலையைப் பார்க்க வருகிறார்கள். ஒவ்வொருவரும் கையில் ஏதாவது பொட்டலம் கொண்டு வருகிறார்கள். ஆனால் இந்தக் குழந்தை விவகாரம் வேறு; புதிதாக வீட்டுக்கு வந்துள்ள மோட்டார் சமாசாரம் வேறு. ஒருவரும் ஏதும் கொண்டு வருவதில்லை. ஆனால் நாம் விலை கொடுத்து வாங்கியுள்ள சுகத்தைப் பங்கு போட்டுக் கொள்ள அத்தனை பேரும் ஆசைப் படுகிறார்கள். இவ்வளவு மலிவாக இவ்வளவு விலை யுயர்ந்த சுகத்தை அடித்துக்கொண்டு வந்ததைப்பற்றி நம்மைச் சிலாகிக்கிறார்கள். நம்மை அவர்கள் தூக்கிவைத்துப் பேசுவ தெல்லாம் எதற்கு? நம் வண்டி அவர்களை ஒரு தடவையாவது தூக்கிக்கொண்டு போக வேண்டும் என்பதுதான் அவர்களது அந்தரங்க ஆசை.

ஒரு நாளைக் குறிப்பிட்டு 'காரில் ஜால்லி டிரிப்' போகலாமென்று நண்பர்களிடம் சொன்னேன். குறிப்பிட்ட தினத்தில் சுகத்தைப் பகிர்ந்துகொள்ள நண்பர்களும் வந்தார்கள். ஏறினோம். வண்டி ஐம்பது மைலுக்கு அதிக வேகத்தில் காற்றைப் பிளந்துகொண்டு பாய்ந்து செல்லும்போது அடடா அந்த சுகத்தை அந்த ஷோக்கை என்னென்று சொல்ல? தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும் செம்மறியாட்டு—சே—தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும் அந்த சுகம்! வேகமே உலகில் பரமசுகம் என்ற தத்துவம் விளங்கிற்று.

நடுவே சிலிண்டரில் ஏதோ கிரிச் கிரிச்சென்று சத்தம் ஏற்பட்டது. அட சனியனே! நின்றல்லவோ போய்விட்டது வண்டி. வேதாரண்ய உப்பளத்து ரோட்டில் நட்டநடுவில் நின்றுபோய் விட்டதே இந்தச் சனியன். சரி, எப்படியாவது வண்டியை ஐந்து மைல் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும். அந்த ஊரில் ஒரு மோட்டார் டாக்டர் இருக்கிறாராம். அவரிடம் என்ன வியாதியென்று கேட்கலாம். ஆனால் எப்படிக் கொண்டு போவது? நண்பர்களும் நானுமாகத் தலையில் தூக்கிக் கொண்டு போவதா?

வண்டி நின்று போச்சு என்றவுடன் கொஞ்ச நேரம்தான் நண்பர்கள் சும்மாயிருந்தார்கள். பிறகு ஒவ்வொருவனும் மோட்டார் பள்ளிக்கூடத்தில் படித்தவன்போல அபிப்பிராயம் தர ஆரம்பித்தான். ஒருவன், "ஏண்டா அப்பவே சொல்லப்படாதா வண்டியில் ரிபேர் இருக்கிறதென்று!" என்று குத்திப் பேசினான். வாய் திறக்க எனக்கு வழி யில்லை. இந்த சுகவஸ்து இப்படி நமது மானத்தைக் கெடுக்குமென நான் நினைத்தேனா?

"நீங்களெல்லாம் கொஞ்ச தூரம் தள்ளினீர்களானால் வண்டி ஸ்டார்ட் ஆகிவிடும். பிறகு ஏறிக்கொள்ளுங்கள்!" என்று நான் யோசனை சொன்னேன். வேறு வழியின்றி எல்லோரும் ஒத்துக்கொண்டனர். இத்தனை வருஷம் மனிதனை வைத்து இழுத்திருக்கும் இந்த மோட்டாரை ஒரு நாள் மனிதன் தள்ளுவது நன்றி செய்வது போலல்லவா வென்று மனதுக்குள் நினைந்து கொண்டேன்.

முறைத்துக் கொண்டு நின்ற நமது சுக வஸ்துவை அந்தப் படை படைக்கிற வெய்யிலில் முணு முணுத்துக் கொண்டே அந்த நண்பர்கள் தள்ளினார்கள். 100 கஜ தூரம் போனபின்பு திடீரென்று வண்டி ஸ்டார்ட் ஆயிற்று. எல்லோரும் ஏறி உட்கார்ந்து கொண்டனர். ஆனால் அடுத்த நூறாவது கஜத்தில் மறுபடியும் சனியன் நின்று விட்டது.

மானம் வெட்கங்களை மறந்து மறுபடியும் நண்பர்களை இறங்கச் சொன்னேன். வேறு வழியின்றி இறங்கி நண்பர்கள் தள்ளினார்கள். நல்ல வெய்யில். பசி வேளை. ஆகவே அவர்களுடைய பேச்சு எந்த தினுஸில் இருந்திருக்குமென்று சொல்ல வேண்டுமா? முணுமுணுத்துக் கொண்டே தள்ளினார்கள். 100 கஜம் சென்றவுடன் ஸ்டார்ட். நான் பிரேக் போட்டு எல்லோரும் ஏறியவுடன் மறுபடியும் சனியனான மெஷின் நின்று விட்டது.

நாலைந்து தடவை இந்த மாதிரி தள்ளுவதும் ஏறுவதும் இறங்குவதுமான நாடகம் நடை பெற்றது. நண்பர்கள் முன்னர் அனுபவித்த வேக சுகமெல்லாம் காற்றில் போய்விட்டது. வாய் முணு முணுப்பு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கடைசியில் வசவாக மாறிவிட்டது.

இந்த வேடிக்கையைப் பார்க்க அந்தச் சேரியிலிருந்து நாலைந்து பேர் வந்து நின்று விட்டார்கள். மோட்டார் மனிதனைத் தூக்கிச் செல்வது தான் வாடிக்கையான காட்சி. ஆனால் வாடிக்கை மாறி மனிதன் மோட்டாரைத் தள்ளுவதென்றால் அது வேடிக்கை தானே! வேடிக்கை பார்க்கும் கூட்டம் அதிகமாக அதிகமாக எனது நண்பர்களின் ஆத்திரமும் அதிகமாயிற்று. இந்தப் பனைகளை ஏன் ஏற்றிக் கொண்டு வந்தோமென்று எனக்குக் கூடப் பட்டது. பரஸ்பரக் கோபம். ஆனால் ஒருவரும் வெளிக் காட்ட வில்லை.

நாலைந்து தடவை இந்த நாடகம் நடந்த பின்பு தான் எனக்கு இரகஸ்யம் வெளியாயிற்று. ஸ்டார்ட் ஆன மோட்டாரை மீண்டும் பிரேக் போட்டு நிறுத்தினால் மெஷின் நின்று போகிறதென்று தெரிந்தது. ஆகவே என்ன செய்வதென்று தீர்மானித்து விட்டேன். ஆறாவது தடவை அவர்கள் தள்ளியபோது வண்டி கிளம்பிற்று. நான் பிரேக் போடவே யில்லை. விர்ரென்று மோட்டாரை அடித்துக்

கொண்டு போக ஆரம்பித்தேன். ‘டே! டே!” என்று பின்னால் கூச்சலிட்டது கேட்டது. என்ன கூச்சலிட்டாலென்ன, எனக்கு எப்படியாவது எனது சுகவஸ்து, டாக்டரை அடைய வேண்டும். வாயில் வந்தபடி முணு முணுத்த பயல்களை, சிறிது நேரத்திற்கு முன் சுகம் அனுபவித்து அதற்குள் மறந்துவிட்ட இந்த நன்றியற்றவர்களைப் பழிக்குப் பழி வாங்குவதில் தப்பிதமில்லையென்று தோன்றியது. நான் போயே போய்விட்டேன்.

அந்த ஐந்தாறு மைல்களையும், உப்பள ரோட்டில் படை படைக்கிற வெய்யிலில் நண்பர்கள் நடக்க வேண்டுவென்று பிரும்மா எழுதி யிருக்கும் போது அதை மாற்ற முடியுமா? முழுக் குற்றத்தையும் மோட்டார் மீது போடுவதை விட அன்றைக்கு வந்திருந்த அந்த ஷோக் நண்பர்களின் தலையெழுத்திலும் குற்றமுண்டு என்று சொல்வதில் தான் எனக்குத் திருப்தி. அந்த நண்பர்கள் அப்புறம் என் வீட்டு வாசல் வழி கூட வருகிறதில்லை. ஒருவர் “இனி எந்த மோட்டாரிலும் ஏறுவதில்லை” என்று வீரசபதம் செய்து கொண்டிருக்கிறாராம். அவர் கோபம், என் பாக்கியம்.

ஆனால் எனது மோட்டார் இப்போது சும்மாய்த் தானிருக்கிறது. அதை ரிபேர் செய்ய குறைந்தது 400 ரூபாய் வேண்டுமாம். சுண்டைக்காய் கால் பணம். சுமை கூலி அதே அளவா? 500 ரூபாய்க்கு வண்டி வாங்கி 400 ரூபா ரிப்பேரா? அன்றைக்கு ஒரு நாளைக்கு இது தந்த ‘சுக’மே 1000 ரூபா பெறுமே! ‘போதும் வேக சுகம்’ என்பது எனது முடிவு. 5000 ரூபா சுகத்தை 500 ரூபாய்க்கு மலிவாக வாங்கி விட்டதாக நினைப்பதும் தப்பு என்று இப்போது பிரசாரம் செய்து வருகின்றேன். நமது மோட்டாரில் நாய்கள் குட்டி போடுகின்றன. பூனைகள் பிரசவிக்கின்றன. வரட்டி அடுக்கி வைக்க நல்ல இடம் என்கிறாள் என் மனைவி. எப்படியாவது போட்ட 500 ரூபாய்க்கு அதனிடம் வேலை வாங்குவதிலேயே இப்போது கருத்தாயிருக்கிறோம். யாருக்காவது பாக்கி சுகம் அதனிடம் அனுபவிக்க இஷ்டமிருந்தால் என் விலாசத்துக்கு எழுதிக் கேளுங்கள். வெற்றிலை பாக்கு சகிதம் தானம் செய்ய நான் தயார்.

பனி நாடுகளில் படையெடுப்பு

வட துருவப் பிரதேசத்தில் பனிக்காடான நிர்மானுஷ்யப் பிரதேசம் இருக்கின்றது. அவ்விடத்தில் யாத்திரையாகப் போன எத்தனையோ தீரர்களுடைய உயிர்கள் பலியாகி விட்டன. அந்தப் பிரதேசத்தில் திக்விஜயம் செய்து தத்தம் ஆட்சியில் சிறு பகுதிகளைச் சேர்த்துக்கொள்ள இன்று கானடா தேசமும், ருஷியா தேசமும் முனைந்து நிற்கின்றன.

இந்தப் பூமி-வேட்டையினால் கிடைக்கக்கூடியது சுமார் 20 லக்ஷம் சதுர விஸ்தீரணம்தான். அத்தனை மைல் பனிக் கட்டி கிடைக்குமென்பதற்காக அந்த நாடுகள் இந்தப் பிரயத்தனத்தில் இறங்கவில்லை. உலகத்தையே ஆட்டி வைக்கக்கூடிய சில இரகசிய சாதனங்களும் வட துருவ நாடுகளில் கிடைக்கக்கூடு மென நம்பப்படுகிறது. இந்த இரு தேசத்தார்களுக்கும் இருக்கும் கிடுபிடியில் அநேக சாஸ்திர நிபுணர்களும், யாத்திரா சோதகர்களும் முனைந்திருக்கிறார்கள்.

இந்தப் பனிக் கண்டத்தில் எண்ணைகள், மீன்கள், விலை மதிப்புள்ள உலோகச் சுரங்கங்கள், (வெள்ளி, தங்கம், ரேடியம் முதலியன) இருக்கின்றன என நம்பப்படுகிறது. மண்ணெண்ணெய்க்காகப் பாதாள யாத்திரைகூட செய்ய வெள்ளைக்காரர் எப்போதும் தயார். தங்கத்துக்காக சந்திர மண்டலத்துக்கும் போகத் தயார். ஆகவே வட துருவத்தில் இவை கிடைப்பதென்றால் விட்டுவிடுவார்களா?

இதுவரை வட துருவப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாகங்கள் கானடா அல்லது ருஷியாவுக்கு சொந்தமாகவே இருக்கின்றன. ஆனால் புதிய புதிய பிரதேசங்களைக் கண்டுபிடித்து தத்தம் நாட்டுடன் சேர்த்துக் கொள்ளவேண்டுமெனவே இப்போது போட்டாப் போட்டி.

ருஷியாவின் தலைவன் ஸ்டாலின் என்பான் துருவ ப்ரதேசம் ருஷியாவின் ஆதிக்கமாக வேண்டுமென திட்டங்கள் போடவே, கானடாவும் பரபரப்புடன் துருவ திக்விஜயத்தில் இறங்க முனைந்து விட்டது.

ஜன வாசமே முடியாதென கைவிடப்பட்ட இடங்களை யெல்லாம் செப்பனிட்டுத் தந்ததும், சரியான குடியேற்ற வசதிகள் செய்து கொடுத்து, ராணுவ சாதன முறைகளை யொட்டி புதிய நகரங்கள் உண்டாக்கியதும் ருஷ்யாவின் பெருமையே.

கானடாவும் கூடிய வரை முயற்சியுடன் தானிருக்கிறது. ஆனால் அதன் ஆதிக்கத்தின் விஸ்தீரணமோ 1,258,217. ஜனத்தொகையோ என்றால் 13,000 தான். அதாவது ஜனங்கள் இன்னும் அதிகம் குடியேறவில்லையென்பது தெரிகிறது. ஆயினும் அந்தக் கடற்கரை யோரங்களை யெல்லாம் ஆராய்ந்து நிர்மாண ஏற்பாடுகள் செய்துதான் வருகிறது. கொஞ்ச காலத்தில் “கரடி ஏரி” (Great Bear Lake)யிலிருந்து ‘ரேடியம்’ என்ற உலோகத்தை நோண்டி எடுத்து உலகத்திற்கு விற்பனைக்குக் கொண்டுவரப் போகிறதாம்.

இன்னும் கானடா தேசம் தங்கள் ஆகாய விமான மார்க்கத்தை துருவத்தை நோக்கியே ஸ்தாபனம் செய்திருக்கிறது. நான்கு வருஷம் முன் பாகத்தான் ஐக்கிய அமெரிக்காவிடம் 3,000 பனி மான்கள் (Reindeer) வாங்கி மாக்கன்ஸி நதிமுகத்தில் விட்டு வைத்து ஜனங்களுக்கு யாத்திரா வசதிகள் ஏற்படுத்தியது. இதனால் ஆகாரத்துக்கும், உடைக்கும் வட துருவ பாகங்களில் உள்ளோருக்கு சப்ளை செய்ய முடியுமாம்.

ஆகார விஷயமாக, சீக்கிரத்தில் விளையக்கூடிய புதுக் கோதுமை வகைகளை கிருஷி நிபுணர்கள் கண்டுபிடித்து வருகிறார்களாம். இம்முறையில் துருவத்திலேயும் பயிரிடலாம் என்ற நம்பிக்கையே இவர்களுக்கு.

கானடாவின் வடகோடிப் பிரதேசங்களிலும் பெரிய நதிகள் பல இருக்கின்றன. இவைகளில் சில மாதங்கள் பனிக்கட்டி யில்லாமல் இருக்கும். அக்காலங்களில் இவைகளிலிருந்து மின்சார சக்தியும் எடுத்து உபயோகிக்க கானடா ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

இந்த இரு வல்லரசுகளின் பூமி வேட்டையின் பயனாக என்ன விளையுமோவென்று உலகம் கவனித்துக்கொண்டிருக்கிறது.

குடும்பத்துக்காக—

(ஆயில்யம் எழுதியது)

காற்றில் இருந்த பேச்சு கடைசியில் வாஸ்தவமாகவே ஆகிவிட்டது. வேலை நிறுத்தம் செய்துவிடுவதே சரியென்று தலைவர்கள் தீர்மானம் செய்து விட்டார்கள். இந்த வேலை நிறுத்தத்தில் வெற்றி பெற்றால் கஞ்சிக்கு உப்பாவது போட்டுக் குடிக்கலாம் என்பது அநேக குடும்பங்களின் நினைப்பு. தொழிலாளர்கள் போரில் இறங்கிவிட்டனர். அந்தப் பெரிய தொழிற் சாலையில் அத்தனை பேரும் வேலை நிறுத்தம் செய்தனர்.

'கப்பு கப்பென்று' மகா கோரமாகப் புகை கக்கிக் கொண்டிருந்த அந்த யந்திர சாலையின் புகை போக்கிகள் நிர்மலமாக நிமிர்ந்து நின்றன. ஓவென்று ஓலமிட்டு ஓடிக் கொண்டிருந்த யந்திர பூதங்கள் ஓய்வெடுத்துக் கொண்டன. வெந் நீரெல்லாம் ஆறிப் போயின. எப்போதும் விடு விடு வென்றிருந்த தொழிற்சாலை அன்று குறட்டையுமின்றி தூங்குவது போலத் தோன்றிற்று. ஆனால் தொழிற் சாலைக்கு வெளியே பல்லாயிரக் கணக்கான ஜீவன்கள் பசியை உத்ஸாகத்தால் மூடிக்கொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தன. பிரதி தினமும் தொழிலாளர் தலைவன் தொழிற்சாலை யதிபர்களோடு பேசிப் பேசி வெறுங் கையோடு திரும்பி வந்து கொண்டிருந்தான். பஞ்சாயத்துப் பலிக்க வில்லை.

"என்ன ஏதாவது வந்தானா வழிக்கு?"

"கொஞ்சமாவது விட்டுக் கொடுத்தானா?"

"சே! ஒரு கை இப்போ பார்த்து விட வேண்டும்."

இப்படிப் பலவாறாக அந்தக் கூட்டத்தில் பேச்சுக்கள் இருந்தன. தொழிற் சாலை வாயிலைச் சில தொழிலாளிகள் காத்துக் கொண்டு நின்றிருந்தார்கள். உத்ஸாகத்துக்குக் குறைவே யில்லை.

தொழிற் சாலைக்கு கொஞ்ச தூரத்தில் ஒரு குடிசையில் அமாவாசை உட்கார்ந்திருந்தான். அவன் மனைவி அவனைத் திட்டிக் கொண்டிருந்தாள். அவள் எப்படி சகிப்பாள்? 'அம்மா கஞ்சி! கஞ்சி!' யென்று குழந்தைகள் அவள் தோளைப் பிடித்துக் கொண்டு கத்திக்கொண் டிருந்தன. அந்த ஆத்திரத்தை அவள் தன் புருஷன்மீது அப்போது தீர்த்துக்கொண்டிருந்தாள்.

அமாவாசை அந்தத் தொழிற்சாலையில் 15 வருடகாலம் ஆயில் இஞ்சின் டிரைவராக வேலை பார்த்து வந்தவன். அவன் ஒருநாள் குடித்துவிட்டு ரகளை செய்ததன் பயனாக ஆபீசைவிட்டுத் துரத்திவிட்டார்கள். பிறகு 6 வருடகாலமாக ஏதேதோ வேலைகள் செய்து அவன் குடும்பத்துக்குக் கஞ்சிவார்த்து வந்தான். அவன் பெண்டாட்டி ஆப்பம் விற்று தினத்துக்கு நாலணாவரை சம்பாதித்துக்கொண் டிருந்தாள். இப்போது இரண்டு மாதமாக அவனுக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. தோட்டவேலை, வண்டிவேலை, லாயம் கழுவுதல் எதுவுமே கிடைக்கவில்லை. தொழிற் சாலையில் 'ஸ்ட்ரைக்' ஆதலால் அவளுக்கும் ஆப்பம் எதும் விற்பனையாகவில்லை. பத்து நாளாய் அந்தக் குடும்பம் அரைப் பட்டினி கிடந்து கொண் டிருந்தது.

"இந்தா முத்தாயி! சும்மா சும்மா திட்டாதே! நீயே கோவிச்சுக்குனா நான் என்னா செய்யறது? இந்தக் கொழுந்தேங்களுக்காக நான் உயிரையும் கொடுப்பேன்னு நெனைச்சுக்கோ. நாளேலேந்து ஊட்டுலே யாரும் பட்டினி யில்லை. இது காத்தவராயசாமி ஆணை" என்று கூறிவிட்டு விடுவிடெனப் புறப்பட்டான்.

II

இந்த ஆறு வருட காலத்தில் எத்தனையோ தடவை அமாவாசை மானேஜர் ஆபீஸுக்குப் போய் வேலை வேண்டுமென்று கேட்டதுண்டு. ஒவ்வொரு தடவையிலும் "வேலை காலியில்லை" யென்றும், "உன் பேர் கருப்பு ஜாப்தாவிலே இருக்கிறதே" என்றும் மானேஜர் சொல்லி வந்தார். "எனக்கேதாவது தருகிறதா யிருந்தால் நான் பெரிய துரையைக் கேட்டுப் பார்க்கிறேன்" என்று மேஸ்திரிக் குப்பன் அமாவாசையிடம் ஆசை வார்த்தை பேசி யிருக்கிறான். ஆனால் தாகுதா, லஞ்சம்தர அமாவாசையிடம் பணம் ஏது? அவனுக்கு அந்த ஆபீசில் இத்தனை நாள் நுழைவதற்குக்கூட முடியாமலிருந்தது.

இன்றைக்கு அவன் மானேஜர் பங்களாவுக்குப் போனவுடன் என்ன உபசாரம்! என்ன பேச்சு! "வாடா அமாவாசை! ஏது உடம்பு எல்லாம் நல்லாயிருக்கிறயே! எத்தனை தரம் உனக்குச் சொல்றது. நம்ப ஆபீஸிலே ஆயில் மிஷினிலே வேலை செய்தாக்கே மாஸா மாஸம் சம்பளம் கிடைக்குமே. அப்பா ஏன் லாட்டறி யடித்துக்கொண்டு அலையுறே?" என்று பரிவுடன் பேசினார் இன்றைக்கு அந்த மானேஜர்.

"அதுக்குத் தான் சாமி வந்திருக்கிறேன்" என்று கூறினான் அமாவாசையும்.

"பேஷ்! அதான் சரி! ஸ்ட்ரைக்கு, கைக்கு, என்று பேசற பயல்களைக் கேட்காதேடா அமாவாசை! எல்லாம் இன்னும் இரண்டு நாள்தான். அப்புறம் அக்கரைச் சீமேலேந்து ஆள் வந்து இறங்குது. ஆபீசு திமுதிமு என்று நடக்கப் போவுது. இந்தக் கலாட்டாவெல்லாம் புகைஞ்சு போகப்போவுது. எல்லாம் நாங்க ஏற்பாடு சேஞ்சுட்டோம்" என்றார் மானேஜர்.

ஒரு நாளைக்கு இரண்டு ரூபா கூலி! அந்தத் தொகையைக் காதால் கேட்கும் போதே அமாவாசையின் தலை கிறுகிறென்று சுழன்றது. குடும்பத்தில் தரித்திரம் விடிந்தது என்று அவன் நிச்சயித்து விட்டான். அட்வான்ஸாக நாலு ரூபா வாங்கிக்கொண்டு அவன் வீட்டுக்குத் திரும்பினான். வரும் போதெல்லாம் அவன் வாய் சிட்டி அடித்துக்கொண்டிருந்தது. அவ்வளவு குஷி அவனுக்கு. முத்தாயியிடம் தனக்கு வேலையானதைப்பற்றி அவன் சொல்லவே யில்லை. தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருந்த தொழிற் சாலையில், தான் வேலை செய்யப் போவதாகக் கூறினால் ஒருவேளை அவள் தடுப்பாளோ என்னவோ வென அவன் நினைத்தான். எப்படியானா லென்ன? தனக்கு என்ன நேர்ந்தால்தாலென்ன? குழந்தைகள் வயிறு நிறையச் சாப்பிடு.

மல்லவா? மேலும் இத்தனைநாள் வேலையில்லாது அலைந்து கொண்டிருந்தவனுக்கு வேலை யொன்று கிடைத்ததல்லவா?

வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்கள் ஒரு வேளை தன்னைத் தாக்கினாலும் தாக்கக்கூடு மென்று அவனுக்கு நினைப்பு ஏற்பட்டது. என்ன நாலஞ்சு உதை—இரண்டு குத்து—இவ்வளவுதானே! மிஞ்சிப் போனாலென்ன? எல்லோரும் திட்டுவார்கள். ஆனால் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாச் சம்பளம் யார் கொடுப்பார்கள்? அத்தனை கஷ்டத்தையும் சகிக்கலாம் இரண்டு ரூபாய்க்கு என்று அவனுக்குத் தோன்றிற்று.

III

அன்றைக்கு அவனும், அவனைப் போன்ற இன்னும் சில 'கறுப்புக் காலி'களும் போலீஸ் பாராவில் தொழிற்சாலைக் கேட்டில் நுழைந்த போது சுற்றிலும் பிரமாத ஆரவாரமாக இருந்தது. பலமான சாப மழை! குறுக்கே படுத்திருந்தவர்களை யெல்லாம் போலீசார் அப்புறப்படுத்தி விட்டார்கள். ஒரு வழியாக அமாவாசை தன் பழைய தொழிற்சாலைக்குள் புகுந்தான். அந்தப் பெரிய என்ஜின் அவனை "வாடா தம்பி!" என்று அழைப்பது போல அவனுக்குத் தோன்றிற்று. ஆறு வருடம் பிரிந்திருந்தானல்லவா?

அன்றைக்கும் மறுநாளும் ஒருவாறு நகர்ந்துவிட்டது. அட்வான்ஸாகப் பெற்ற நான்கு ரூபாய்க்கும் வேலை செய்தாகிவிட்டது. அன்று மாலை ஆபீஸ் விட்டு அவன் வெளியே வரும் போது கூக்குரல் வெகு பலமாயிருந்தது. அவனுக்கே கொஞ்சம் பயம் ஊறத் தலைப்பட்டது. "அட பாவி! இது உன்னை விடாதுடா!" என்று அநேக ஸ்திரீகள் திட்டிய சொற்கள் அவன் காதில் தைத்தன. அவன் நேரே மானேஜர் பங்களாவுக்குப் போவதென்ற நினைத்தான். போகும் வழியெல்லாம் அவன் மனது ஒரே உளைப்பாயிருந்தது. "ஒரு வேளை இந்தப் பசங்கள் ஆபீசுக்கே நெருப்பு வச்சுப்புடுவாங்களோ?" என்று அவனுக்குப் பட்டது. ஆகவே மானேஜரிடம் சொல்லி யோசனை கேட்கலாமென அவன் நினைத்தான்.

மானேஜரிடம் அவன் கைகட்டி நின்றான். "எனக்கு ரண்டு நாளைக்கு லீவு குடுங்க! அப்பறம் வரேனுங்க!" என்றான்.

"என்னடா அமாவாசை! பயப்படறயா என்ன? அட அசடே! இத்தனை போலீசுக்காரரிருக்கும்போது உனக்கென்னடா பயம். உன் பேரிலே யாராவது விரலை வைக்கட்டும் ஒரு கை பார்த்துவிடுவோம் அந்தப் பசங்களை" என்று கூறி தன் மீசையில் கை போட்டார் மானேஜர்.

"எசமாங்க செய்வீங்க! ஆனாக்கே எனக்கு என்னவோ போலே இர்க்குது. நான் என்ன செய்யட்டுங்க. ஆபீசுக்கே நெருப்பு வச்சூட்டாங்கன்னா நான் எப்படி பொழைப்பேனுங்க?" என்றான்.

"யாரடா சொன்னது? அதெல்லாம் பயப்படாதேடா!" என்றார் மானேஜர்.

IV

மறுநாள் ஆபீசுக்குப் புறப்படும் போது மார்பு படபடவென்று அமாவாசைக்கு அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. அன்றைக்கு ஏதோ ரகளை நடக்குமென்றே அவன் நினைத்தான். வீட்டிலிருந்து புறப்படும்போதே சகுனமெல்லாம் சரியாயில்லை போல அவனுக்குத் தோன்றிற்று. ஆகவே அவன் தன் குழந்தைகளை யெல்லாம் கடைத் தெருவுக்கு அழைத்துக் கொண்டு போய் பப்பர் மிண்டெல்லாம் வாங்கித் தந்து அவைகளோடு விளையாடி மனதை சமாதானம் செய்து கொள்ள முடியுமாவென்று பார்த்தான். ஒன்றும் சமாதானமாகவில்லை. ஆபீசின் சங்கொலி கேட்டுவிட்டது.

முத்தாயியிடம் "டவுனுக்குப் போய் வாரேன்" என்று சொல்லிவிட்டு அவன் நடந்தான். வழியில் போலீஸ் பாரா ஆட்களும் வந்து சேர்ந்தனர். அவனுக்கு யாவும் நரகம் போலத் தோன்றிற்று. எப்படியோ அத்தனை கூச்சலையும் குழப்பத்தையும் கடந்து அவன் ஆபீசுக்குள் நுழைந்தான். அன்றைக்குக் கட்டாயம் அந்தப் பயல்கள் நெருப்பு வைத்து விடுவார்களென்றே அவனுக்குப்பட்டது. அமாவாசைக்கு சாவதற்கு எப்போதுமே இஷ்டமில்லை. என்ஜின் ரூமுக்குப் போனான். அவன் பயம் அவனை விட்டபாடில்லை. அந்த என்ஜினே ஒரு பூதம் போல அவன் கண்ணுக்குப் பட்டது. தலை கிறு கிறென்று சுழலவே அவன் ஆங்கிருந்த நீள விசு பலகையில் உட்கார்ந்தான். பிரக்ஞை தவறிவிட்டான். திடீரென்று — அடதெய்வமே!— ஏதோ கும்மென்று இருட்டியது போலிருந்தது. உடனே புகைச்சல் போலத் தோன்றிற்று. தடாலென்று சத்தங்களும் கேட்டன. ஆயிரக் கணக்கானவர்கள் "அடே அமாவாசை திருட்டுப் பயலே" என்று கத்துவதுபோல அவனுக்குக் கேட்டது. தான் எதிர்பார்த்த ஆபத்து வந்து விட்டதென்று நினைத்தான். கிரீச்சிட்டுக்கொண்டு எழுந்து ஓடினான். நிலை குலைந்து ஓடின வேகத்தில் யந்திரத்தில் மோதிக் கொண்டான்.

* * *

"இந்தத் தொழிலாளிக்கு இரத்த ஓட்டம் நின்று போனதால் இறந்து போனான்" என்று டாக்டர்கள் அமாவாசையின் சவத்திற்கு ஸர்டிபிகேட் கொடுத்தார்களாம். இரண்டு நாளாகப் புருஷனைக் காணோமே யென்று வாசற்படியிலேயே உட்கார்ந்திருந்த முத்தாயிக்கு அவள் புருஷன் சவமே வந்து சேர்ந்தது. ஐயோ பாவம்! "அட! ராசாவே இந்த வேலைக்குப் போகிறேனென்று என்னிடம் சொல்லி யிருக்கலாகாதா" என்று முத்தாயி ஒப்பாரி வைத்து அழுதாள்.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,

"ஒன்று செய்வோம்"

(சிட்டி)

மணி 12-45 இரவு. சினிமாவுக்குப் போய்விட்டு பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் அன்று சினிமாவுக்குப் போனதைப் பற்றி ஒரு பஸ்காரனாவது உணரவில்லை போல் தோன்றியது. அவர்கள் பத்திரிகை தான் படிக்க வில்லையோ, பத்திரிகையில் எங்களைப் பற்றிய செய்தி போடத்தான் மறந்து விட்டார்களோ தெரியவில்லை. சுமார் அரை மணி நேரம் காத்திருந்தோம். திடீரென்று எங்களில் ஒருவர் "என் சார் ஒன்று செய்தாலென்ன?" என்றார். கொஞ்சம் காது கொடுத்துக் கேட்டோம். யாராவது ஒருவர் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு நடந்து சென்று ஒரு ஜெட்கா அமர்த்திக் கொண்டு வர வேண்டு மென்றும் அப்படி யில்லாவிட்டால் எல்லோரும் நடந்து வீட்டிற்குப் போக வேண்டு மென்றும் கூறினார்.

இதில் இரண்டு மூன்று வேலைகளடங்கி யிருக்கின்றன. ஒன்று செய்வோ மென்று சொல்லி விட்டு இத்தனை செய்யச் சொன்னால் ஏன் கோபம் வராது? இந்த மாதிரி ஒன்று செய்யும் வழக்கம் நம் நாட்டில் அதிகமாய்ப் பரவிக் கொண்டே வருவதால் தான் இன்னும் சுயராஜ்யம் வரவில்லை என்று தோன்றுகிறது.

மகாத்மாவைப் பாருங்கள். திடீரென்று இருதயத்தைச் சோதித்துப் பார்க்கிறார். ஏதாவது மூலை முடுக்கில் ஒளிந்து கொண்டிருப்பதைப் பார்த்து விடுகிறார். உடனே "ஒன்று செய்வோம்" என்ற தீர்மானத்துக்கு வந்து விடுகிறார். ஆனால் உண்மையில் செய்வது எத்தனை? எண்ணி மாளாது. அவர் சொல்வது ஒன்று தான். ஆனால் செய்ய வேண்டியதோ ஒன்றல்ல, பல. அல்லது ஒன்றுமே செய்ய வேண்டாம் என்ற நிலைக்கும் நம்மைக் கொண்டு வந்து விடுகிறார். சட்ட மறுப்புக் கூட செய்யக் கூடாதாம்.

ஒரு வாரத்திற்கு முன்தான் சட்டமறுப்பு செய்வதென்று தீர்மானித்தேன். காரணம் வீட்டில் குடும்பபாரம் சகிக்க முடியவில்லை. கொஞ்சம் யோசனை செய்து, "ஒன்று செய்தாலென்ன, நிம்மதியாய் கொஞ்ச நாள் ஜெயிலில் போய் உட்காரலாமே" என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது தான் காந்திஜியும் 'ஒன்று செய்கிறேன்' என்று முற்பட்டு என்னைத் தடுத்து விட்டார். இப்பொழுது நான் என்ன செய்வது?

இந்த 'ஒன்று செய்யும்' எண்ணம் அநேகமாய் பல காரியங்கள் செய்ய வேண்டி யிருக்கும்போதுதான் தோன்றும். எதைச் செய்வது எப்படி பிழைப்பது என்று தோன்றாமல் திகைத்துக் கொண்டிருக்கும் போது தான் ஒரு நண்பர் முன் வந்து "என் சார் ஒன்று செய்தாலென்ன?" என்பார். ஒன்றை மாத்திரம் செய்துவிட்டால் மற்றவைகளை யார் செய்வதோ தெரியவில்லை.

சிலர் பல விஷயங்களையும் ஒன்று செய்து விடுவதுமுண்டு. அப்பொழுது சந்தேகத்துக்கு இடமே யிருக்காது. 'ஒன்று செய்வோம்' என்னும் வார்த்தைகளும் முற்றிலும் அப்பொழுது பொருந்தும்.

இன்னொரு விசேஷம். மனிதனின் இயற்கையான லோபித்தனத்தை இந்த வார்த்தைகளே நன்கு எடுத்துக் காட்டுகின்றன. எவ்வளவோ செய்யக்கூடிய சக்தி இருக்கும்போது ஒன்று மாத்திரம்தானா செய்ய விரும்பவேண்டும். ஒவ்வொருவரும் ஒன்று மாத்திரம் செய்தால் உலகம் என்னவாகும். வீட்டில் சமையல் விஷயத்தில் மனைவி ஒன்று மாத்திரம் செய்யத் தீர்மானித்து விட்டால் என்ன விபரீதம் நேரிடும் என்று யோசித்துப் பாருங்கள். வெறும் சாதம், அல்லது குழம்பு மாத்திரம்தானே கிடைக்கும். ஆகவே வீட்டுக்காரி என்ன சமைப்பதென்று ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது வழக்க வேகத்தில் 'ஒன்று செய்' என்று சொல்லி விடாதீர்கள். பெரிய க்வியான பாரதியார்கூட ஒன்று மாத்திரம் செய்யத் தீர்மானித்தது கொஞ்சம் வருத்தமாய்த் தானிருக்கிறது.

'இனி ஒரு விதி செய்வோம்' என்றார். ஏன்? இரண்டு விதிகள் செய்தால் என்ன முழுகிப் போய்விட்டது? ஆனால் பின்வரும் வார்த்தைகளைக் கவனிக்கவேண்டும். 'தனி யொருவனுக்கு உணவில்லை யெனில்........... ....யழித்திடுவோம்' என்றதிலிருந்தே, 'ஒன்று செய்யும்' விஷயமாக யாருக்காவது சரியான சாப்பாடில்லாமல் போனாலும் போய்விடுமென்பதை யுத்தேசித்தே பாரதியார் இம்மாதிரி பாடி வைத்தார் என்று தோன்றுகிறது.

பின்னும் ஊன்றி நோக்குங்கால் இந்தப் பாட்டே 'ஒன்று செய்யும்' விஷயத்தை எதிர்த்துப் பாடியதென்று புலனாகும். நிற்க, பாரதியாரின் மற்றொரு பாட்டுக்குக்கூட 'ஒன்று செய்யுமடிமை உனக்கு சுதந்திர நினைவோடா, ரெண்டு செய்ததுண்டோ........' என்றும் பாடமுண்டென்பது எம் துணிபு.

பழமை நூல்களை நோக்குங்கால் 'ஒன்றும் செய்யும் வழக்கம்' நம் நாட்டில் தொன்றுதொட்டு நடந்து வருவது தெரிகிறது.

ஒன்றே செய்க
இன்றே செய்க
நன்றே செய்க

என்பது போன்ற ஒரு பாட்டே தமிழ் மக்களின் பலதிறப்பட்ட சக்தியைக் குன்றச் செய்து விட்டதென்று தெரிகிறது. இது காரணங் கொண்டே பள்ளிக் கூடங்களில் இம்மாதிரி சக்தியைக் குறைக்கும் போதனைகளடங்கிய நூல்களைப் பாடமாக வைப்பதைப் பற்றி அடுத்த தமிழன்பர் மகாநாட்டில் அவசியம் யோசிக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

ஆனால் இவ்விஷயம் மிகச் சிக்கலானதாதலால் தீவிர யோசித்தே செய்ய வேண்டும். யோசித்தாலும் தீர்ந்தபாடில்லை. ஆயினும் ஒன்று செய்தாலென்ன?.............................மறந்து விட்டேன் எத்தனை வேண்டுமானாலும் செய்யுங்கள்.

மரண தண்டனை!

விக்டர் ஹியூகோவின் கருத்துக்கள்.

விக்டர் ஹியூகோ என்ற பிரஞ்சு ஆசிரிய மேதாவி எழுதிய "மரண தண்டனை பெற்றவனது கடைசி நாட்கள்" என்ற நூலிலிருந்து, எடுக்கப்பட்டது :—

நான் மற்றவர்களைக் கேட்கவில்லை. சட்ட நிபுணர்களைக் கேட்கிறேன். தர்க்க சாஸ்திரிகளைக் கேட்கிறேன். வாதமும் வாக்கியார்த்தமும் செய்யும் பண்டிதர்களைக் கேட்கிறேன். அதன் அழகுக்காக, அதன் தன்மைக்காக, அதன் நேர்மைக்காக, மரண தண்டனையை நேசிப்பதாகச் சொல்லுகிறார்களே, அவர்களைக் கேட்கிறேன். அவர்கள் அவர்களுடைய காரணங்களை வெளியே சொல்லட்டும்.

மரண தண்டனைக்கு லாயக்கான குற்றவாளி ஜன சமூகத்தைக் குத்திக் காயப்படுத்தி விட்டான் என்றும் இனியும் அவ்வாறு அவன் செய்யக்கூடும் என்றும் எனவே அவனை ஜன சமூகத்தினின்றும் பிரித்து விடவேண்டும் என்றும் மரண தண்டனையைப் போற்றி, அதை விதிக்கும் நீதிபதிகள் கூறுகிறார்கள்.

இது தான் அவர்கள் சொல்லக்கூடிய காரணமாயின், (குற்றவாளிக்கு) நிரந்தரச் சிறைவாசம் போதுமே. மரண தண்டனை விதிப்பதால் என்ன உபயோகம்? கைதி, சிறையை விட்டுத் தப்பி விடலாம் என்று நீங்கள் வாதாடக் கூடும். இன்னும் கடுமையாக, பந்தோபஸ்து செய்கிறது தானே! இருப்புக் கிராதிகளுக்கு வலுக் கிடையாது என்று நீங்கள் நம்புவீர்களானால், காட்டு மிருகங்களைக் கூட்டில் அடைத்து வைப்பது மட்டும் முடிந்த காரியமா? ஜெயிலர் போதுமான இடத்தில், கொலையாளி ஏன் முகத்தைக் காண்பிக்க வேண்டும்?

"ஜன சமூகம் பழி வாங்க வேண்டும். அது தண்டிக்க வேண்டும்" என்று அவர்கள் நீட்டிப் பேசுகிறார்கள்.

இரண்டும் முடியாத காரியங்கள். பழி வாங்குதல், தனி நபரின் வேலை. தண்டனை என்பது கடவுள் ஒருவருக்கே, உரிமையானதாகும்.

ஜனசமூகம், இரண்டு கோடிகளுக்கும் இடையே நிற்கின்றது. தண்டிப்பதற்கு அதற்கு அதிகாரம் கிடையாது அது கடவுளைச் சேர்ந்தது). பழி வாங்குதல் என்பது ஜனசமூகத்தின் அந்தஸ்துக்கு, கௌரவத்துக்கு, ரொம்பவும் தாழ்ந்ததாகும். தன்னைத்தானே பழிவாங்கிக் கொள்ளுவதற்காக, ஜன சமூகம் தண்டிக்கக்கூடாது. மற்றவர்களுக்கு நற்கதி யேற்படும் பொருட்டு, குற்றவாளியை ஜனசமூகம் திருத்த வேண்டும்.

அவர்களுடைய கடைசிக் காரணத்தை ஆராய்வோம். இந்த தண்டனையைப் பார்த்து, மற்றவர்கள் பயந்து போய், குற்றம் செய்யமாட்டார்கள் என்கிறார்கள். "நாம் உதாரணங்கள் காண்பிக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு நேரும் கதியைக் கண்டு, குற்றம் செய்யத் தூண்டப்பெறுவர்கள் திகைத்துப் போகும்படி செய்யவேண்டும்" என்கிறார்கள்.

நல்லது. முதலில் ஒன்று சொல்லுகிறேன். உதாரணம் காண்பிப்பதில் யாதொரு பயனும் இல்லை என்கிறேன். தூக்குத் தண்டனையைப் பார்ப்பதால், கோரிய பலன் நேருவதில்லை என்று அழுத்தமாகச் சொல்லுகிறேன். தூக்குப் போடுவதைப் பார்ப்பவர்களின் நல்ல உணர்ச்சிகள் யாவும் வரண்டு போய்விடுகின்றன. அவர்கள் சீரழிந்து போகிறார்கள். இதற்கு ஏராளமாக, நான் ருசுக்கள் காண்பிக்க முடியும்.

நீங்கள் தூக்குப் போடும் மனிதனுக்கு குடும்பம், உறவினர், நண்பர்கள் இல்லை என்று வைத்துக் கொள்ளுவோம். அவனுக்குப் படிப்பும் பழக்கமும் இருக்காது. அவனுடைய புத்தியோ, உள்ளமோ வளர்வதற்கு யாரும் சிரத்தை எடுத்திருக்க மாட்டார்கள். இந்தப் பெற்றோரும் உற்றாரும் இல்லாத திக்கற்ற குழந்தையை, நீங்கள் கொல்லுவதற்கு, உங்களுக்கு அதிகாரம் ஏது? 'குடும்ப வாழ்க்கையில் வேர் விடவில்லை அவன்' என்ற காரணத்தால், நீங்கள் அவனைத் தண்டிக்கிறீர்கள். நீங்கள் கவனிக்காமலிருந்ததால், அவன் தனித்து நின்ற குற்றத்துக்காக, அவனுக்கு மரண தண்டனை அபராதம் விதிக்கிறீர்கள்—அவனுடைய நிர்க்கதியை, நீங்கள் குற்றமாக ஆக்குகிறீர்கள்—தான் செய்வது என்ன என்று அறிந்துகொள்ள, அவனுக்கு யாரும் சொல்லிக்கொடுக்கவில்லை. அவன் அறியாமையில் வாழ்ந்தான். தவறு அவனது நிர்க்கதியின் பேரில். அவன் பேரில் அல்ல. சாதுவான ஒருவனை நீங்கள் அழிக்கிறீர்கள்.

அவனுக்குக் குடும்பம் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். உங்களுடைய தண்டனை அவனை மட்டும் பாதிக்கிறது என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அவன் தகப்பன், தாய், மனைவி குழந்தைகள்—யாவரும் அந்த தண்டனையின் மூலமாய் கஷ்டப்படுவார்கள். அவனைக் கொல்லுவதால், அந்தக் குடும்பத்தாருக்கே, படுகாயம் உண்டாக்கி விடுகிறீர்கள். இப்பொழுதும் தண்டிக்கப் படுபவர்கள் சாதுக்கள், நிரபராதிகள்—அவன் அல்ல. அவனுடைய குடும்பம், குழந்தைகள்—அவன் இறந்த பிறகு, எப்படித் தவிக்கும் என்பதைப் பற்றி நினைத்தால், நீங்கள் உடல் பதறாம லிருக்க முடியுமா?

கலக்கமும் தெளிவும்

(காளிதாஸன் பாடுகிறான்)

துடி துடிக்குது வானம்—அதில்
இடி யிடிக்குது மேகம்
படி குதிக்குது வெடி வெடிக்குது
கடு கடுக்குரல் காற்றடிக்குது

நடு நடுக்குது கூதல்—சுற்றிச்
சிடு சிடுக்குது காடு
வெடு வெடுப்பொடு கிடுகிடுத்திட
மடமடக் கதிர் சடசடத்திட

புடை புடைக்குது பாறை—அதை
உடைத் துருளுது வெள்ளம்
திடுதிடுக்கிடக் கடல் குடையுது
திசைக் களிறுகள் மசக்கை தட்டுது

சடச் சடச் சடச் சட்டா—எனத்
தாளங் கொட்டுது மாரி
சலசலக்குரற் கிலு கிலுப்பைகள்
உல குலுக்கிட மலை குலுக்கியே

வீசி வெட்டுது மின்னல்—அந்தத்
தேசிடைக் கருங் கன்னி
விட்டு விட்டண்டக் கட்டுக் கழன்றிடப்
பொட்டெனக் களி நட்ட மிட்டனள்

சுற்றிச் சுழலுது சூலம்—இருள்
பற்றி யெரிந்திடுங் கோலம்
சொக்கி மைக்கு மக்கினிச் சுடர்
மிக்கவள் பதம் புக்கு வாழுவோம்

சூறை நின்றது காணாய்—இளஞ்
ஜோதி வந்தது பேணாய்
சூதழிந்தது வா தொழிந்தது
மீதெழுந்தது போதைக்கு மின்பம்

ஸ்டீபன் ராடிச்

(சக்கரவர்த்தி ஸ்ரீநிவாஸன் எழுதியது)

'கண்' கெட்டிருந்தும் கருமமே கண்ணாயிருந்த வீரர்

கிரோட் தேச "வல்லபாய்"

"வல்லபாய்" என்றால் கூர்ஜர நாட்டில் அழுத பிள்ளை வாய் மூடும். அம்மாகாண விவசாய மக்களின் உயிராக, ஜீவ நாடியாக விளங்குபவர் வல்லபாய். அவரது வாழ்க்கை விவசாயிகளுக்காகவே அர்ப்பிக்கப் பட்டதாகும். குஜராத்தில் விவசாயிகள் அவரது வாய்ச் சொல்லையே சட்டமாகக் கொள்கிறார்கள். ஆதலால் தான் மகாத்மாஜி அவருக்கு "ஸர்தார்" என்ற பெயரைச் சூட்டினார். அதேபோல,

ஐரோப்பா கண்டத்திலுள்ள கிரோட் தேசத்தின் "ஸர்தாராக" விளங்கினவர் ஸ்டீபன் ராடிச் என்பவர். இன்று அத்தேசமக்கள் ஐக்கியத்துடன் வாழ்ந்து வருகின்றனரெனின், அதற்குக் காரணமாயிருந்தவர் ராடிச் சேயாகும். ஸ்டீபன் ஓர் உயரிய லக்ஷியத்துக்காக உயிர் நீத்ததை கிரோட் தேசமக்கள் என்றும் மறவார்.

இந்த அரைக் குருடான, சிறிய விவசாயி யார்? இவர் எந்தெந்த துரைத்தனங்களுடன் சம்பந்தப் பட்டாரோ அவைகளெல்லாம் இவரை ஒரு முள் மாதிரியே கருதி வந்தன. தமது வாக்குச் சாதுர்யத்தால் கிரோட் மக்களை இவர் தம் கைக்குள் வைத்திருந்தார்.

வீரர் ஸ்டீபன் 1870-ம் வருஷத்தில் கிரோடியாவுக்கு அருகிலுள்ள திரிபார் ஜெவொ என்னும் சிறு கிராமத்தில் பிறந்தார். அக்கிராமத்தி லிருந்த யாவரைக் காட்டிலும் ராடிச்சின் பெற்றோரே மிகவும் ஏழைகள்; ஆகவே அவர் தமது இளம் பிராயத்தை வறுமையிலேயே கழித்தார். சிறந்த கல்விமானாக ஆக வேண்டுமென்ற அவா அவருக்குப் பெரிதும் உண்டு. தமது தமையனின் உதவியைக் கொண்டு அவர் ஜாகிரெட் கல்லூரிக்கு அனுப்பப் பட்டார். குருடா யிருந்ததால், அவர் பிறரது துணை கொண்டே யாவற்றையும் கற்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டி யிருந்ததால் அவருக்கு அபார ஞாபக சக்தி யிருந்தது.

சிறு வயதிலேயே அவருக்கு ராஜீய விஷயங்களில் சிரத்தை ஏற்பட்டது. 17-வது வயதில் அவர் ருஷியாவிற்கு விஜயஞ் செய்தார். அங்கு ருஷிய ஜன சமூக புரட்சிக்காரர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டு, அவர்களிடமிருந்து நிலச் சீர்திருத்தக் கொள்கைகளை யெல்லாம் கற்றார். "விவசாயிகளுக்கே நிலம்" என்ற ருஷியா தேச வசனத்தையே அவர் தமது மூல மந்திரமாகக் கொண்டு, ஹங்கேரி, ஆஸ்டிரியா இத்தேசங்களிலுள்ள முதலாளிகளுடன் பெரும் போராட்டத்தை நடத்தினார்.

மாணவரா யிருக்கையிலேயே அவர் பல நாடுகளுக்கும் போய், கிராமம் கிராமமாக நடந்து சென்றார். இதனால் தான் அவர் விவசாயிகளின் உண்மையை நிலையை உணர முடிந்தது. இளைஞர் ராடிச் கிரோடியாவின் விடுதலையிலே கண்ணும் கருத்துமா யிருந்தார். ஹங்கேரியிலுள்ள நிலச்சுவான்தார்களைத் தாக்கிப் பேசியதன் காரணமாக அதிகாரிகளுக்கும் அவருக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. அதனால் அவர் எண்ணற்ற தடவைகள் சிறையிலடைக்கப்பட்டார்.

1895-ம் ஆண்டில் அரசர் பிரான்சிஸ் ஜோஸப் விஜயஞ் செய்த காலையில் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைச் செய்ததற்காக ராடிச் மீண்டும் சிறையிலடைக்கப் பட்டார். விடுதலையானதும் பாரிஸ் நகர் நண்ணி, அங்கு ராஜீய சாஸ்திரத்தைக் கற்றார். பின்னர் ராஜீய வேலையையே தமது வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக் கொண்டார்.

அக்காலத்திலே விவசாயிகளுக்கு அதிகமான ஓட்டுரிமை யில்லாவிடினும் ராடிச், தமது சாமர்த்தியத்தின் காரணமாக கிரோடியாவின் பார்லிமெண்டில் அங்கம் வகிக்கலானார். 1904-ல் அவர் கிரோட் விவசாயிகள் கக்ஷி யொன்றை ஸ்தாபித்தார். இக் காலத்திலிருந்து மகா யுத்த காலம் வரையில், ஹங்கேரி அரசாங்கத்துக்கு அவர் ஒரு முள்ளாகவே யிருந்து வந்தார். அவர் மழை பொழிவது போல் சொற்பெருக்கு நிகழ்த்தக்கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவர்; அவரைக் கண்டால் எந்தச் சர்க்காருக்கும் சிம்ம சொப்பனந்தான்.

மாகியர் என்ற வகுப்பினர் ஹங்கேரியாவிலுள்ள ஸ்வாங்ஸ் என்ற ஜாதியாருக்கு அந்நியப் பழக்கங்களைக் கற்றுக் கொடுத்துத் தேசத் துரோகிகளாக்கப் பாடுபட்டு வந்ததால், ராடிச் அம்முயற்சியை யடக்க முற்பட்டார். இதன் காரணமாக அவர் சுமார் 30 தடவை சிறையி லடைக்கப் பட்டார்.

வெளி வந்ததும், கிரோடியாவுக்கு வேண்டியது பரிபூரண சுயேச்சையே என அவர் வற்புறுத்தினர். கிரோடியாவைத் தன் வசப்படுத்திக்கொள்ள ஸர்பியா தேசம் தலைகீழாக நின்று முயற்சித்தது. ராடிச் கிரோடியாவின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட அரும் பாடுபட்டார். ராஜீய அமைப்பைத் தாக்கியதால் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டு ஒரு வருஷ காலம் காவலில் வைக்கப் பட்டார். விடுதலை யடைந்து என்ன பிரயோஜனம்? மறுபடியும் இரண்டு வருஷ தண்டனை அவருக்குக் கிடைத்தது. ஆனால் அலெக்ஸாண்டர் மன்னனின் விசேஷ உத்தரவால் அவர் விடுவிக்கப்பட்டார்.

1925-ம் ஆண்டு வரையில் அவர் பெல்கிரேட்டுடன் போராடினார். அத்தேசத்தின் ராஜீய அமைப்பைக் கவிழ்த்துவிட அவர் தமது வல்லமையை யெல்லாம் உபயோகித்தார். அச்சமயத்தில் அதிகாரத்துக்கு வந்த ஒரு கட்சி ராடிச்சைக் கொலை செய்வது சிறந்த தேசாபிமான மாகுமெனக் கருதியது. இச்சமயத்தில் தான் புனிகாராவிக் என்பவன் ராடிச்சைத் தமது கைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினான். வயிற்றில் படுகாயமுண்ட ராடிச் ஜாகிரெப்புக்குக் கொணரப் பட்டார்; இங்கு பலவாரங்களுக்கு அவர் அவதிப் பட்டு, ஆவி துறந்தார்.

தங்களது வீரச் செயல்களின் காரணமாகச் சிலர் தாம் மரணமடைந்த பின்னரும் உயிர் கொண்டு வாழ்கின்றனர்; இத்தகைய வீரர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர் ஸ்டீபன் ராடிச் என்பவரும். கிரோட் தேச சரித்திரத்தில் அவரது பெயர் மகிமையான ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றது.

ஒண்ணே காலணா

("கவசன்" எழுதியது)

"ஊருக்கெல்லாம் வருகிற மகமாயி உனக்கு வ்ரமாட்டேங்கறாளே!" என்று வசைமொழி கானம் செய்துகொண்டே சென்றாள் ஓர் கிழவி. அப்பொழுதுதான் சட்டென்று எனக்கு ஞானோதயமுண்டாயிற்று. தங்க நாணய நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, ஜப்பான் சைனா சவுக்கடி என்று எல்லாவற்றிற்கும் பிடிக்கிற சனியன் தற்காலத்தியக் கல்வி முறைக்கு வரவில்லையே யென்று எண்ணினேன். அப்பப்பா, தடுக்கி விழுந்த விடமெல்லாம் கலாசாலைகளாகவும், ஹைஸ்கூல்களாகவு மிருக்கின்றன. இந்த யுனிவர்ஸிடி மிஷின்களுக்குத்தான் ஒய்ச்சல் ஒழிச்சல் கிடையாதா? எங்கு மிஷின் நின்று விடுமோவென்று அடிக்கடி ரிபேர் செய்வதற்கும், எண்ணை ஊற்றுவதற்கும் எத்தனை செனெட் அம்மாஞ்சிகள்! "மலிந்தால் சரக்குத் தானே மார்க்கெட்டுக்கு வரும் என்பார் என் தந்தை!" அந்தக் காலம் இப்பொழுது எம். ஏ, பீ. ஏ. அண்ணாத்தைகளுக்கு வந்து விட்டது. தடுக்கி விழுந்தால் பி.ஏ. அவர்களின் மார்க்கெட் விலை சரியாக ஒண்ணே காலணா!

ஹாம்! ஒண்ணே காலணா ஆசாமிகளென்று ஒரு சிறு பயல் கூறிவிட்டானே யென்று உறுமுகிறீர்கள்? உண்மையைக் கூறினால் கூடவா இவ்வளவு கோபம்? பொருளாதார சாஸ்திரிகள், ஒரு சாமானின் விலை, உற்பத்தித் தொகையையும் வாங்குகின்றவர்களின் விருப்பத்தையு மொட்டி நிர்ணயிக்கப்படுமென்பார்கள். பட்டதாரிகள் தொகை மிகுந்து ஒண்ணே காலணா மதிப்பிற்கு வந்துவிட்டால் அது என் குற்றமா?

என்னடா இப்படி ஒரே கணக்காய் ஒண்ணே காலணா வென்று குறிப்பாய்க் கூறுகிறான் என்று வியப்படைகிறீர்களல்லவா? ஆமாம், எனக்குத் தெரியும்! ஒண்ணே காலணாவின் மதிப்பை நீங்கள் நன்குணர்ந்திருந்தால் இப்படி என்மீது விழுந்து உதைக்க யோசனை செய்ய மாட்டீர்கள்! ஒண்ணே காலணா செய்யும் காரியம் ஒன்றிரண்டா?

என் தம்பி ராமநாதன் மெட்ரிக்குலேஷன் பாஸ் செய்ததும் காலேஜில் சேருவதற்கு மனுப்போட ஒண்ணே காலணா கவர்தான் தேவையாயிருந்தது. பின்பு எப். ஏ. பாஸ் செய்த பின் பி.ஏ. இடம் ரிஸர்வ் செய்யவும் அதே ஒண்ணே காலணா கவர்தான். தம்பி பாஸ் செய்ததும் அவனுக்கு சந்தோஷத்தைத் தெரிவிக்க (Congratulations) வந்த ஒண்ணே காலணா கவர்கள் எவ்வளவு தெரியுமா?

இத்துடன் மட்டுமல்ல! எங்கு வேலை காலியென்று தெரிந்தாலும் அங்கே என் தம்பியின் மனு வில்லாமலிராது. ஒண்ணா காலணா கவரில் பதிலுக்கும் ஒண்ணே காலணா தபால் பில்லைகள் வைத்து தெய்வத்தின்மேல் பழியைப் போட்டுவிட்டு மனுப் போட்டுவிடுவான். அவன் போட்ட பல மனுக்களில் இரண்டு மூன்றிற்குத்தான் பதில் வந்தது. அவைகளும் 'அன்பெய்டு' (Unpaid) கவர்சள். வெகு ஆவலுடன் ஒரு ஒண்ணே காலணாவுக்குப் பதிலாக இரட்டிப்புச் சார்ஜு கொடுத்து வாங்கினான். அதில் என்ன எழுதியிருந்தது. தெரியுமா? என்ன எழுதியிருந்தாலென்ன இப்பொழுது கவலை! முடிவாக வேலை கிடைக்கவில்லை.

என் தம்பிக்கு ஒண்ணே காலணா வென்றால் பிரமாத கோபம் வந்துவிடும்! அவன் கோபத்திற்குக் காரணம் ஒண்ணே காலணா கவரில் மனுப் போட்டு சளைத்துப் போய்விட்டதால் மட்டுமன்று. வேறு வேலையில்லாமல் திண்டாடும் காலத்தில் ஏதாவது நாலெழுத்துக் கிறுக்கினால் ஏதாவது பத்திரிகாசிரியர்கள் அங்கீகரித்து வயிறு வளர்க்க இரண்டு காசு கொடுக்க மாட்டார்களா வென்பது ராமநாதனின் வெகு நாளைய விருப்பம். என் தம்பி எழுதி ஒண்ணே காலணாக் கவர்களிலனுப்பிய கட்டுரைகளின் எண் கணக்கிலகப்படா. முக்காலணாப் பில்லைகளொட்டி புக்போஸ்டிலனுப்பினால் போதுமென்பது தெரியாது. அவ்வளவு சமர்த்திருந்தால் அழகாய்க் கட்டுரை எழுதும் சமர்த்தும்தான் கூடவே வந்திருக்குமே. இப்படி ஆயிரம் கட்டுரைகளனுப்பி எல்லாவற்றையும் ஆசிரியர் குப்பைக்கூடை கபளீகரம் செய்யாதல்லவா? ஒன்றே யொன்று ராமநாதன் செய்த பூர்வ ஜன்ம புண்யத்தாலோ அல்லது அவன் தொந்திரவு தாங்காமல் ஆசிரியர் மனமுவந்தோ பிரசுரமாய் விட்டது. அன்று எங்கே என் தம்பி சந்தோஷத்தால் செத்துப் போய் விடுவானோ வென்ற கவலையாய் விட்டது. எங்கள் ஊர் ஏஜண்டுக்கு வந்த பிரதிகள் எல்லாவற்றையும் வாங்கி பீரோவில் அடுக்கிவிட்டான். ஓர் தினம் அவன் மாமனார் வீட்டிற்கு வந்திருந்த சமயம், "இதோ பார்த்தீர்களா? இவ்வளவு பத்திரிகைகளிலும் என் கட்டுரைகள் பிரசுரமாய் இருக்கின்றன!" என்றான். எல்லாப் பத்திரிகளும் ஒரேமாத இதழ்தான் என்று அவன் மாமனாருக்கு உண்மையிலேயே தெரியவில்லை யென்றே எண்ணுகிறேன். தெரிந்திருக்குமோ தெரிந்திராதோ; தெரியாதவர் போன்றே நடித்தார்.

கட்டுரைக்குச் சன்மான மனுப்பும்படி ராமநாதன் ஆசிரியரவர்கட்கு எழுதிய ஒண்ணே காலணாக் கவர்களே நான்கு ரூபாய்க்கு மேலாகிவிட்டது. ஆசிரியர் அனுப்பிய சன்மானமோ ரூ. 1 12 0. உடனே என் தம்பி பத்திரிகையின் அட்டைப் புறத்திலுள்ள ஆசிரியரின் குறிப்புகளைப் புரட்டிப் பார்த்தான். ஆசிரியர் உசிதப்படி சன்மானமளிக்கப்படும் என்ற வாக்கியம் கண்ணில் பட்டது. மேலே என்ன செய்வது?

ஒண்ணே காலணாவின் மகத்துவத்தைப் பார்த்தீர்களா? உபயோகமில்லாமல் எவ்வளவு ஒண்ணே காலணாக்கள் இவ்வண்ணம் உலகில் தினந்தோறும் ஒவ்வொருவராலும் செலவிடப்படுகின்றன? அதைப்போன்ற உபயோகமில்லாமல் ஒவ்வோர் நாளும் புதிது புதிதாக பீ. ஏக்களும், எம். ஏக்களும் தோன்றினால் அவர்களுக்கு வேலை எப்படித்தான் கிடைக்கும்?

வ. வே. சு. அய்யர் எழுதிய
குருகோவிந்த சிங்கன்
தபாற்கூலி யுள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.



[மஹா கவி காளிதாஸனின் நாடகத்தின்படி துஷ்யந்தனால் திரஸ்காரம் பண்ணப்பட்ட சகுந்தலை அவன் ஸபையில் நின்றுகொண்டு இன்னது செய்வது என்பது தெரியாமல் தவித்தாள். அவனது கடுஞ் சொற்களுக்கு ஆற்றுமல் மூர்ச்சை யடைகிருள். அப்பொழுது மேனகை வந்து தன் மகளை தூக்கிச் செல்கிருள். நடுவழியில் சகுந்தலைக்கு பிரக்ஞை வருகிறது.]

மேனகையும் சகுந்தலையும்

(கு. ப. ராஜகோபாலன்)

சகுந்தலை—ஸகி, அனஸூயா! இல்லையே! நான் எங்கிருக்கின்றேன்?

மேனகை—சகுந்தலா! உன் அன்னையின் மார்பில்.

சகுந்தலை—அன்னையா! எனக்கேது அன்னை? அன்னையும் பிதாவும் எனக்கு அந்தக் குலபதி கண்வ மஹர்ஷிதான். நீங்கள் யாரம்மா? என்னை எங்கு எடுத்துச் செல்கிறீர்கள்?

மேனகை—வாஸ்தவமாக, கண்ணே நான் உன்னைப் பெற்றெடுத்த பேதை ஆ, என்னை நம்பமாட்டாயா? என்னைத் தழுவி யிருக்கும் அங்கங்கள் சொல்லவில்லையா? சகுந்தலா, நான் உன் தாயார் மேனகை!

சகுந்தலை—மேனகையா! அப்ஸரஸ்களில் முதன்மை பெற்றவள் என்கிருர்களே அவளா?

மேனகை—ஆம், அந்தப்பாவி நான் தான். உன்னை உனக்குகந்த ஸ்தானத்துக்கு எடுத்துச் செல்கிறேன்.

சகுந்தலை—எனக் குகந்த ஸ்தானம் எது? துஷ்யந்த ராஜனுல் ஆக்ஞாபிக்கப்பட்ட சிறையா?

மேனகை—இல்லை, ஸ்வர்க்கத்தில் உன் தாயாரின் அருகில், வாழையின் அடியில் அதன் கன்றுபோல.

சகுந்தலை—ஸ்வர்க்கத்திலா? ஸ்வர்க்கத்திலிருந்துதான் என் நாதனுலேயே ஒரே யடியாய்க் கீழே தள்ளப்பட்டுவிட்டேனே! இனிமேல் என்னுல் எப்படி அதற்குப் போகமுடியும்? முடியாது துஷ்யந்தன் ஒருவேளை பச்சாத்தாபம் கொண்டு கைப்பிடிப்பாரென்ரு? நான் நினைக்கவில்லை.

மேனகை — துஷ்யந்தன் கேவலம் பூலோகத்து அரசன். நான் உன்னை, என் மகள் என்ற கௌரவத்தால், தேவராஜன் ஸந்நிதியில் என் பக்கத்தில் அமர்த்திக் கொள்கிறேன்.

சகுந்தலை—எதற்காக?

மேனகை — எதற்காகவா! அமராவதியில் என்றும் மங்காத லாவண்யத்துடன் துக்கக் கலப்பில்லாத நித்ய சுகத்தை அனுபவிக்கத்தான். என்னை மன்னி, சகுந்தலா! இன்னும் சில வருஷங்களுக்கு முன்னேயே நான் உன்னை அழைத்துச் சென்றிருக்க வேண்டும்.

சகுந்தலை—நீங்கள் யாரா யிருந்தாலும் சொல்கிறேன், கேளுங்கள். பாவம்! ஏன் வீண் ஆயாசம்? துஷ்யந்தனை விட்டு எனக்கு இனிமேல் சுகமேது? ஸ்வர்க்கமேது? அவர் ஏதோ தயை யற்று என்னைத் தள்ளிவிட்டாலும் 'என் ஹ்ருதயத்தைவிட்டு நான் அவரை அகற்றமுடியாது. எனக்கு நித்யமாய்விட்ட அந்த வஸந்தத்தின் ஒரு நாளை மறக்கமுடியுமா? ஹா! ராஜனே! அந்தப் புனிதமான ஆசிரமத்தின் சாந்தத்தில் லயித்து சகிகளுடன் பிரகிருதியேபோல் காலங் கழித்துவந்த என்னைச் சீரழிக்க எங்கிருந்துவந்து முளைத்தீர்கள்? வேத மந்திரங்களையும், இயற்கையின் கானத்தையுமே அறிந்த என் செவிகளில் என் ஒரு தீங்குரலின் ஒலியை நிரப்பினீர்? அன்று செய்த அவ்வளவு செய்கைகளிலும் வார்த்தைகளிலும் ஒன்றுகூடவா நினைவுக்கு வரவில்லை? தேனைக் குடிக்கும் தேனீக்கள்போல என் முகத்தை மொய்த்த உமது கண்கள்கூடவா என்னை மறந்திருக்கும்? முடியாது, வேண்டுமென்று என்னைத் திரஸ்கரித்துவிட்டீர். பின்னை யேன் பேதையாகத் திரிந்த எனக்கு இந்த உணர்ச்சியை ஊட்டிய பின்பு உதறினீர்கள்? ஐயோ! என் பிராணன் கூடப் போகவில்லையே—

மேனகை—சகுந்தலா!—

சகுந்தலை — அன்று வனத்திற்கு மானை அடிக்க வந்தீரோ, ஒரு பெண்ணின் ஹிருதயத்தை உமது கூரிய சல்யத்தால் பிளக்கவந்தீரோ? உமக்கு நான் இப்பொழுது தேவையில்லையோ? என்னை நினைவுக்குகொண்டு வரவேண்டிய அவசியமில்லை. மதுபானம் செய்த பிறகு பாத்திரத்தை விட்டெறிவது போல என்னை எறிந்துவிட்டீர். அப்பப்பா! எவ்வளவு பிரதிக்ஞைகள்! எவ்வளவு அடையாளங்கள்! என்ன சோதனை! மோதிரம்கூட எங்கு தவறக்கூடும்? அம்மா நீங்கள் அந்த ராஜனால் ஏவப்பட்டு என்னை அவர் அவமானத்திற்கோர் ஆதாரமாக இல்லாமல் செய்யப் போகிறீர்கள் போலிருக்கிறது. நீங்கள் சிரமப்படவேண்டாம். என்னுயிர் தானே நீங்கிப்போகும். உடல் இனிமேல் அழிந்துவிடும்.

மேனகை—கண்மணி! உறுதியாகச் சொல்கிறேன். நான் உன் தாயார். என் பெயர் மேனகை. வெட்கம்விட்டுச் சொல்கிறேன். என் ஸாஹஸத்தால் நான் விச்வாமித்ரரின் தபஸை அழித்த காலத்தில் நீ பிறந்தாய். பூமியின் ஸம்பந்தத்தால் விதை முளைவிடுவதுபோல. தேவதா கர்வத்தால் உன்னை விட்டுவிட்டு நான் பிறகு ஸ்வர்க்கத்துக்குத் திரும்பினேன்.

சகுந்தலை—ஆ, நினைவு வருகிறது! மத்யான வேளையில் நான் கண்வருக்குக் கால் வருடிக்கொண்டிருக்கும்போது ஒருநாள் நான் கண்டெடுக்கப்பட்ட கதையைக் கூறினர். நீங்கள் குழந்தையை இலைகள்மேல் எறிந்துவிட்டுச் சென்றதும் சகுந்தபக்ஷிகள் என்னைச் சுற்றிப் பறந்து காத்தனவாம். குலபதி கண்வர் அந்தசமயம் அந்த மார்க்கமாய்ப் போக நேர்ந்தது. குழந்தை யழும் குரலைக் கேட்டு என்னை அணுகி, எடுத்துக்

கொண்டுவந்து, பிறைச் சந்திரனை வளர்ப்பதுபோல வளர்த்து வந்தார்.' இந்தப் பாவி யரசன் எனக்கு ராகுவாக—

மேனகை—இனிமேல் பீடையில்லை. ஸ்வர்க்கத்தை நெருங்கி விட்டோம். நாம் செல்லுவது அந்தரிக்ஷம். அதோ பார், பகவான் காச்யபருடைய ஆச்ரமம்! இதுகள்தான் மேரு சிகரங்கள். இதோ பார்த்தாயா கந்தர்வ, கின்னர ஸ்திரீகள் என்னை அஸூயையுடன் பார்க்கிறார்கள்! மேலும் அப்பால் பார்! அமராவதியின் மாளிகைச் சிகரங்கள் தெரிகின்றன! நக்ஷத்திரங்கள்தான் அவைகளின் ஜோதி விளக்குகள். அதென்ன சப்தம் தெரியுமா? ஹாஜார வாசலின் பேரி நாதம். ஏன், கண்மணி, என்ன அப்படிப் பார்க்கிறாய்?

சகுந்தலை — என் தாய் என்கிறீர்களே, உங்கள் முகத்தைப் பார்க்கிறேன் நல்ல வேளை! துஷ்யந்தன் மட்டும் துராத்மா இல்லை. அவனுக்கு முன் லவலேசமும் கருணையென்பது இல்லாத சித்தங்கள் இருந்திருக்கின்றன.

மேனகை—சகுந்தலா!

சகுந்தலை—ச கு ந் த லை! நீங்கள் வைத்த பேரோ? சொல்லவும் நாவெழவில்லையே! அக்ரமமாக ஒருமுனிச்ரேஷ்டரின் தபஸைக் கெடுத்து, என்னைப் பெற்று, நான் படும் இந்தப் பாட்டிற்கு மூலகாரணமாகி, பெற்ற பொறுப்பை ஏற்கத் தைர்யமில்லாமல், தயையென்பது கொஞ்சமுமின்றிப் பிறந்த பேதையைப் பதறவிட்டுச் சென்ற பாதகியான நீங்கள் வெட்கமில்லாமல் ஸ்திரீ யென்றும், என் தாயென்றும் சொல்லிக் கொண்டு என்னை ஸ்பர்சிக்கிறீர்கள்? ஐயோ, எனக்கு முள்ளைக் கட்டிக் கொண் டிருப்பதுபோல இருக்கிறது. தேவதைகளுக்கு ஹிருதயமே கிடையாதோ?........ துஷ்யந்தன் உங்களைக் காட்டிலுமா கெட்டுப்போய் விட்டார்? இல்லை. இல்லை.

மேனகை—அம்மா, உன் பார்வைகளாலும் சொற்களாலும் என்னைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தாய் விட்டது. எனக்கு நன்றாக வேண்டும். ஆனால் இனிமேல் தாங்கமுடியாது. உன் அருமையை நான் அப்பொழுது அறியவில்லையடி கண்ணே! இப்பொழுது அறிகிறேன். என் பெற்றமனம் பதைக்கிறது. நான் இன்னதென்றறியாத ஓர் பிணி இத்தனை வருஷங்களும் என்னை வாட்டிற்று. இன்று அகன்றுவிட்டது. இதோ காச்யபாச்ரமத்திற்கு வந்துவிட்டோம். இங்கு சற்று தங்கி க்ஷணத்தில் ஸ்வர்க்கம் போவோம்.

சகுந்தலை—ஆ, இப்பொழுது தெரிகிறது! கேவலம் கணிகையாகிய உங்களுக்குப் பிறந்தவள் என்ற காரணத்தால்தான் துஷ்யந்தன் என்னை கிருஹிக்க மாட்டேன் என்கிறார். அவர் சந்திர வம்சத்தின் நடு நாயகம்—நான் ஒரு பதிதைதானே. தேவதாஸியின் பெண்தானே!

மேனகை — துஷ்யந்தன் கிடக்கிறான். உயர்ந்த ரத்னத்தின் அருமையை அறியாத மூடன். உன் காந்தியால் இந்திர ஸபையை விளக்கு. சந்திர மண்டலம் கையில் இருக்கும்போது விளக்கை யேன் வேண்டுகிறாய்?

சகுந்தலை—அம்மா, அது உங்கள் தொழில். நான் துஷ்யந்தனின் பத்னி. காந்தர்வ முறையில் கைபிடிக்கப்பட்டவள். கேவலம் பூலோகத்தின் தர்மத்தில் ஈடுபட்டவள் நான். எனக்குத் தேவ ஸுகம் வேண்டாம்.

மேனகை—பைத்யமே! நான் இப்பொழுது உன்னைக் கைவிட்டு விட்டால் உன் கதி என்ன ஆகும்?

சகுந்தலை—நீங்கள் என்னைப் பிறந்தவுடன் கைவிட்டீர்களே அப்பொழுதென்னவாயிற்று? அதுபோல் ஆகிறது. என் ஸம்பந்தமே கூடாது என்று அறுத்துவிட்ட உங்களுக்கு இவ்வளவு கவலை அனாவசியம்.

மேனகை—அடியே, இது வரையிலும் நீ என் குழந்தையென்றும் என் மேல் குற்றமிருக்கிற தென்றும் பொறுத்து வந்தேன். நான் ஆதியில் செய்த குற்றத்திற்கு ஈடு இப்போது செய்துவிட்டேன்—உன்னை அங்கீகரித்துக்கொள்ள முயற்சிசெய்தேன். ஆகையால் வாயை மூடிக்கொண்டு என்னுடன் வந்தால் ஸுகம். இல்லாவிட்டால் மறுபடியும் வீழ்ச்சி.

சகுந்தலை—அம்மா, என்னை பயமுறுத்தவேண்டாம். நான் அடைந்திருக்கும் தாழ்வுக்கும் கீழ் தாழ்வுகிடையாது. உங்களுடைய கோபமும் வீண், பிரியமும் வீண். என்னை உதைத்துத் தள்ளிய துஷ்யந்தனின் பாதம் எனக்கு மேலே தவிர, உங்கள் கூட வந்திருக்கும் ஸுகம் எனக்கு மேலல்ல. அந்த ராஜன் ஏதோவொரு பிரமையாலோ, ஜ்வரத்தாலோ, இப்படி யென்னைக் கைவிட்டாரே தவிர மனதுடன் என்னை நிராகரிக்கவே மாட்டார் என்று என் மனது சொல்கிறது. அந்தச் சொல் எனக்கு ஸத்யம். ஆகையால் நிச்சயம் திரும்பவும் அவர் பாதத்தையடைவேன்.

மேனகை—சகுந்தலா! உனக்கு ஸ்வர்க்கத்தின் நித்ய ஸுகம் வேண்டாமா?

சகுந்தலை—வேண்டாம்.

மேனகை — பெற்றெடுத்தவளின் ப்ரேமை வேண்டாமா?

சகுந்தலை—அது எனக்கு இப்பொழுது தேவையில்லை.

மேனகை—நான் உன்னை இப்பொழுது அந்தரத்தில் விட்டுச் செல்லட்டுமா?

சகுந்தலை—அன்று அந்த அகாத இரவி னிறுதியில் எப்படி என்னை யோசிக்காமல் விட்டுச் சென்றீர்களோ, அப்படியே இன்றும் இந்த அந்தரத்தில் விட்டுச் செல்லுங்கள்.

(அந்தரத்திலிருக்கும் காசியபாசிரமத்தில் சகுந்தலையை விட்டு மேனகை செல்கிறாள்).

மகாத்மா காந்தி எழுதியவை

		ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	....	0	6	0
மகா தியாகம்	....	0	4	0
அனாசக்தி யோகம்	....	0	4	0
ஹிந்து தர்மம்	....	0	2	0
கீதா போதனை	....	0	2	0
உத்தம வாழ்க்கை	....	0	2	0
ஆரோக்கிய வழி	....	0	4	0
நீதி தர்மம்	....	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம்	...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	....	2	0	0

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	....	0	0	6
ஹரிஜனத் தொண்டு	....	0	0	6
ஹரிஜனப் பணி	....	0	0	6
ஹரிஜன விமோசனம்	....	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.



கல்லிடைக்குறிச்சி ராமலிங்க பாகவதர்

ஈ. கிருஷ்ணய்யர்
எழுதியது

கர்னாடக ஸங்கீதம் தென்னிந்தியாவிலுள்ள பல பாகங்களுக்கும் பொதுவாயிருப்பினும், கச்சேரிப் பாணியும் அதைப் பற்றிய ருசியும், இடத்துக்குத் தக்கவாறு மாறுபட்டே காணப்படுகின்றன. தமிழ் நாட்டுக்குள்ளேயே அவைகளில் பல வித்யாசங்கள் தென்படுகின்றன. பெரும்பாலும் கீர்த்தனங்களிலும் துக்கடா உருப்படிகளிலுமே சென்னை போன்ற இடங்களில் பொது ஜனங்களுக்கு அதிகப் பிரியம் காணப்படுகிறதென்றும் வேகமாய்ப் பாடப்படும் 'உருப்படி'களில் அதிக மோஹமிருக்கிறதென்றும் முன்னொரு முறை குறிப்பிட்டிருக்கிறோம். காவிரிக்குத் தெற்கேயுள்ள பிரதேசங்களில் ராகங்கள் விஸ்தாரமாயும், கீர்த்தனங்கள் சௌக்கமாயும் உள்ள பாட்டிற்கே அதிக மதிப்புக் கொடுக்கப்படுகிறது. உதாரணமாய் கல்லிடைக் குறிச்சி போன்ற, சங்கீத ரஸிகர்கள் நிரம்பிய இடங்களில் ஓட்டமாய் ஓடும் கீர்த்தனங்களுக்கும் மற்ற உருப்படிகளுக்கும், அவைகளையே அதிகம் கையாளுவோருக்கும் அதிக ஆதரவோ மதிப்போ கிடைப்பதில்லை. ராகங்களும், விளம்ப கால உருப்படிகளும் எவ்வளவு பாடப்பட்டாலும் சளையாது கேட்டு அனுபவிக்கப்படும். காவிரிக்கு வடக்கேயுள்ள பாகங்களில் சங்கீதத்தில் அதிக மெருகையும் நாஜூக்கையுமே பொதுவாய் எதிர்பார்க்கிறார்கள். சென்னையிலோ, பாடகனுக்கு ஞானம் மட்டமாயிருந்தாலும் மெருகு அதிகமிருந்தால் போதும். தென்கோடி ஜில்லாக்களில் நாஜூக்கு அதிகமில்லாவிடினும் பெருமிதக் கற்பனையும், கேட்போர் மனதைக் கவர்ந்து ஆரவாரிக்கச் செய்யும் சக்தியும் எதிர்பார்க்கப் படுகின்றன. ஆனால் இவ் வித்யாசங்கள் என்றும் நிரந்தரமாக அந்தந்த பாகங்களில் இருந்து வருகின்றன என்றாவது ஒரு பாகத்திலுள்ள பாணியையும் ருசியையும் மற்ற பாகங்களில் முற்றிலும் ஏற்பதில்லை என்றாவது நினைக்கவேண்டாம். கிராமபோன் பிளேட்டுகள் வெளிப் பரவிய பின் இந் நிலைகள் கூட மாறுபட்டு அநேகமாய் எல்லா விடங்களிலும் அவசர சங்கீத வர்க்கத்தைச் சேர்ந்த பாட்டுகளே மேம்பட்டு வருகின்றன. லட்சண ஞானத்தைக் கவனிப்பது அரிதாகி வருகிறது.

திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் முன் கூறியவாறு சங்கீத ருசி காணப்படுவதற்கான பல காரணங்களில் அவ்விடமுள்ள வேதாந்த பாகவதரின் பழைய சங்கீதம் ஒன்று எனலாம். உயரிய சங்கீதக் களஞ்சியமாயிருந்த தஞ்சை ஜில்லாவில் இளம் பிராய முழுதும் பயின்று, இயற்கையா யமைந்த சிறந்த சாரீரமும், ஆழ்ந்த ஞானமும், அதிக சாமர்த்தியமும் கொண்டு அருவி போன்ற நாதப் பொழிவினாலும், அதிகக் கற்பனையினாலும் கேட்போரை வியக்கச் செய்யும் 'பாணி' ஒன்றை அவர் அங்கு பிரபல்யப் படுத்திவிட்டார். மெருகு, நாஜூக்கு இவைகளுக்குப் பதிலாக பெருமித மனக் கிளர்ச்சியை எழுப்பும் சக்தியையே அதிகம் கொண்டது அப்பாணி. விசேஷமாய் ராக சஞ்சாரங்களிலும் சௌக்க கால கீர்த்தனங்களிலுமே அதிக வேலையும் சோபையும் உள்ளது. எனவே அதைக் கேட்டவர்களுக்கு இவ்விரண்டு அம்சங்களும் குறைந்த சங்கீதம் இலேசாய் திருப்தி கொடுக்காது. இப்படி அவர் கற்பித்த பாணியின் அடிப்படையான அம்சங்களில் சிலவற்றைக் கைக்கொண்டு அப்பக்கங்களின் ருசிக்குத் தக்கவாறு பாடிக் கீர்த்தியடைந்து வரும் இளம் பாடகர்களில் அவரது தம்பியான ராமலிங்க பாகவதரே முன்னணியில் நிற்கின்றார். 'பாகவதர்' என்னும் பெயர் பகவத் கதா காலட்சேபம் செய்வோருக்கே உரித்தது. அண்ணா ஒரு காலத்தில் பாகவதரா யிருந்ததால் அப்பெயர் தம்பிக்கும் இறங்கியது போலும்!

ராமலிங்கம் கல்லிடைக்குறிச்சியிலேயே பிறந்து வளர்ந்தவர். இவர் தகப்பனார் முத்து சாஸ்திரி, பாட்டனார் வேதாந்த தீக்ஷிதர் முதலியோர் பரம்பரையாக திருவாடுதுறை மடத்தில் ஆஸ்தான ஸம்ஸ்கிருத பண்டிதர்களா யிருந்தவர்கள். முத்து சாஸ்திரியின் மூன்றாவது குமாரரான ராமலிங்க பாகவதர் தனது தமையனார், வேதாந்த பாகவதரிடமே ஆதி முதல் சங்கீதம் பயின்றார். சுமார் 14 வயது முதல் 7 வருஷம் நன்கு கற்றார். 15 வருஷமாகக் கச்சேரியும் செய்து வருகின்றார். இப்போது வயது 37 இருக்கும். குட்டையான சரீரம். வசீகர லக்ஷணம் படைத்தவ ரென்பதற்கில்லை. நாஜூக்கான நடையுடை பாவனைகளும் விசேஷமா யில்லை. அவைகளை அதிகம் கவனிப்பது மில்லை. சிறந்த தேசீய உணர்ச்சியுடையவர். கதரையே வழக்கமாய் அணிவார். தினசரிப் பத்திரிகைகளையும் வாரப் பத்திரிகைகளையும் விடாது வாசிப்பார். ராஜீய வாதிகளைவிட அவரே அன்றன்று பத்திரிகைகளில் காணும் விபரங்களை கவனித்து வருவார் எனலாம். தொழில் கர்வமோ, படாடோபமோ கிடையாது. எளிதில் சிநேக பாவம் கொண்டு, தெரிந்தோரிடம் நெருங்கிய தோழமை கொள்ளும் இயல்புடையவர். தனது தமையனைப்போல் தொழிலின் கௌரவத்தில் கவனமுள்ளவர். அவருடைய பிடிவாதத்திலும், சுயேச்சை மனப்பான்மையிலும் இவருக்கு ஓரளவுண்டு எனலாம்.

ஆனால் சாரீர சம்பத்தில் அண்ணாவுக்கும் தம்பிக்கும் நேர் விரோதம். இளமையில் ராமலிங்கத்தினிடம் ஸங்கீதத்துக்குரிய சாரீரம் இருந்ததோ என்பது ஸந்தேகம். இப்போது அவருடைய பாட்டைக் கேட்டால் அதை நம்பமுடியாது. இப்பவும் கட்டை சாரீரமாகத் தோன்றினாலும், ஸாதகம் பெருமிதமாயும் ஆச்சரியப்படத் தக்கதாகவும் செய்து அருமையான ஸங்கீதத்தைப் பொழியுமாறு அமைத்திருக்கிறார். வேதாந்த பாகவதரின் தம்பியாயும் சிஷ்யனும் இருந்த போதிலும் அவருடைய ஸங்கீதத்தைப் போலவே இவரதும் முற்றிலும் இருக்கிறதென்று சொல்லவொண்ணாது. வீணை தனத்தைப் போல் வேதாந்த பாகவதரும் தனக்கு தெரிந்த விஷயங்களை முழுதும் மனதாரத் தனது சொந்த உறவினருக்கும் கற்றுக்கொடாத மனப் பான்மையுடையவர். எனவே தம்பி ராமலிங்கம், தனக்குக் கிடைத்த சிக்ஷையுடன் அண்ணா ஸங்கீதத்தில் அதிகக் கேள்வி

யும் கொண்டு தன்னுடைய சொந்தப் பயிற்சியினாலேயே ஸங்கீதத்தில் பெரும்பாலும் தேர்ச்சி பெற்றார். அன்றியும் நாதஸ்வர வழிகளிலே இவருக்கு அதிகப் பிரியமுண்டு. சில சமயங்களில் இவர் பாட்டும் அவைகளைப் பின்பற்றியிருப்பதுபோல் காணப்படும்.

சுருங்கச் சொல்லுமிடத்து கற்பனை விசேஷத்திலும், பெருவாரியாகவும், விஸ்தாரமாயும் ராகங்களைப் பாடுவதிலும், பெரிய கீர்த்தனைகளையே அதிகம் கையாளுவதிலும், மொத்தத்தில் மனமுருகி, பூர்ண கண்டத்துடன் உழைத்துப் பாடி, கேட்போரின் மனதைக் கவர்வதிலும், இவர் தனது தமையனாரின் அம்சங்களைக் கொண்டிருக்கிறார் எனலாம். ஸாதாரணமாய்க் காணப்படாததும், மட்டுக்கடங்காததுமான, மனோ தர்மத்துடன் ராகங்களைப் பொழிவார். மெய்ம் மறந்தே பெரும்பாலும் பாடுவார். அத்தகைய ஸங்கீதத்துக்கு இயற்கையான பாவப் பொழிவுடன் பிறர் மனதை கவரும் சக்தியும் வாய்ந்ததால், அவர் எவ்வாறு அனுபவித்துப் பாடுகிறாரோ அவ்வாறே கேட்போரும் அனுபவித்து ஆரவாரிப்பார்கள். இவ்விஷயத்தில் இவர் செம்பங்குடி ஸ்ரீநிவாஸய்யரை ஒருவாறு ஒத்திருக்கிறார் என்று முன்னே குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால் இவரிடம் அத்துடன் கார்வைகளும் அழுத்தமும் அதிகமுண்டு. முற்றிலும் அவசர ஸங்கீதமில்லை. சில சமயங்களில் கற்பனைகள் மேலுக்குமேல் பொழிந்து வரும்போது, அவைகளின் ஸ்வரூபம் மாத்திரமே அவருக்குத் தோன்றுமே தவிர, பக்க வாத்தியங்களும் இருக்கின்றனவே அவைகளின் சௌகரியத்தையும் அனுசரிக்க வேண்டுமே என்ற ஞாபகம்கூட இருக்குமோ என்பது ஸந்தேகம்.

ராகங்களில் 'இது விசேஷம்' 'அது அதிகப் பிடித்த' மென்பதில்லை. எல்லாவற்றையும் அழுத்தத்துடன் விஸ்தாரமாயும் அநேகமாய் விதரணையாகவுமே பாடுகின்றார். அபூர்வ ராகங்கள் அநேகம் கையாளுகின்றார். 'ஆஹிரீ,' 'ஸரஸ்வதி,' மலய மாருதம்,' 'மேசரஞ்ஜனி,' 'சாருகேசி' முதலிய ராகங்களை இவரிடம் சர்வ சாதாரணமாய்க் கேட்கலாம். நீண்ட கார்வைகள், குழைவுகள், அழுத்தமான பிடிகள், அனி அணியான சஞ்சாரங்கள், 'பிர்க்கா'க்கள், அபூர்வமான கற்பனைகள் எல்லாம் நிறைந்தேயிருக்கும். பெருத்த ஸஞ்சாரங்களின் முடிவில் 'அநஸ்வர'ப் பிடிப்புகளுடன் கொடுக்கும் சில 'ஒதுக்கல்கள்' இவரிடம் விசேஷ அழகையும் பிரத்யேக உணர்ச்சியையும் கொண்டதாகக் காணப்படும். மொத்தத்தில் மேல் 'ஸ்தாயி'யிலேயே அதிக வேலைப்பாடுகள் காட்டும் இயல்புடையவர். அவ்விடத்தில் உறைத்து நின்று வாண வேடிக்கைகள் போன்ற சங்கீத சித்திரவகைகளைப் பொழியும்போது, கேட்போர் நெஞ்சம் கிளர்ச்சியடையாதிருப்பது அரிது.

கீர்த்தனைகளையும், நல்ல அழுத்தத்துடனேயே பாடுகின்றார். தியாகராஜ கீர்த்தனைகளைத் தவிர மற்ற உருப்படிகளிலும்போற்றத்தக்க பரிச்சயமுண்டு. விளம்பகால உருப்படிகள்தான், இவரிடம் நன்கு சோபிக்கின்றன. 'கொலுவை யுன்னடே' 'துளஸீபில்வ' 'சக்கனிராஜ மார்க்கமு,' 'காருபாரு' இவை போன்ற உருப்படிகளைச் சளையாது அடுக்கடுக்காய்ப் பாடும் வழக்கமுண்டு. இப் பக்கங்களில் அது விரும்பக்கூடிய கச்சேரிப் 'பாணி'யாயில்லாதிருப்பினும் அவர் வழியை அறிந்த இடங்களில் சங்கீத அபிமானிகள் அதைப் பொறுமையுடன் கேட்டு அனுபவித்தே வருகிறார்கள்.

இவர் சாதகம் செய்திருக்கும் ஓர் வகை 'பிர்க்கா' சில சமயம் மட்டுக்கடங்காது அருவிபோல் பொழியும். சில தடவை ஹார்மோனியத்திலுள்ள (Tremulo) 'டிரெமுலோ' என்ற 'சலனத்தைப் போலவே கேட்கும். மொத்தத்தில் கேட்போரை பிரமிக்கச் செய்யும். நீண்ட கார்வைகளில் இந்த 'அதிவேபனம்' சுருதிக்கு உள்ளடங்கிக் காணும்போது, சாதாரணமாய்க் காணப்படாததோர் அழகும், உணர்ச்சியும், ஒரு ஜீவனும் இவர் சங்கீதத்தில் தென்படும். ஆனால் சஞ்சாரங்களின் நடுவே வரும்போது பசையில்லாத வெறும் 'பிர்க்கா'வாக த்வனிக்கும். பெருமிதமாகப் பொழிவதை அடக்கியாளுவதுமில்லை. அதைக் கேட்கும்போது ஒரு புறம் அசுர சாதகத்தைப் பற்றிய ஆச்சரியமும், மறுபுறம் அது அழகிய சங்கீதத்துக்கு ஏற்றதா என்ற சந்தேகமும் தோன்றும். சிலர் அதைக் 'குன்னக்குடி' சாதகம் என்பர். ஆனால் இவருக்கும் குன்னக்குடி வித்வான்களுக்கும் எப்போதும் எவ்வித சம்மந்தமுமில்லை. அந்த 'பிர்க்கா'வின் காரணமாக அவசர சங்கீதம் என்று சொல்லவும் முடியாது. அது ஒரு அம்சமே தவிர வேறில்லை. மற்ற விஷயங்களில், நிதானமும், சௌக்கமும், அழுத்தமும் கொண்டு ராகபாவம் நிறைந்த சங்கீதம். இன்னும் நிதானமும், மனோதர்மத்தை அடக்கி ஒழுங்குபடுத்தி விடும் தன்மையும் அதிகமாக இவரிடம் வளருமானால் இவரது சங்கீதம் மேம்படும். ஆனால் அழுத்தமான பிடிகளுடன் பாடுவோர், ஸ்வரங்களையும், சாஹித்தியங்களையும் கடினமாய் உச்சரிக்க வேண்டுவது அவசியமில்லை. இவ் விஷயங்களிலும் ராமலிங்கம் சற்று கவனம் செலுத்துவாராகில், ஸ்வர சாஹித்தியங்களை நயமாய் உச்சரிப்பதோடு, சிற்சில சமயங்களில் காணப்படும் சங்கீதத்துக்கு ஏற்றதல்லா 'கொகொ' போன்ற சப்தங்களும் வராது பார்த்துக்கொள்ளலாம். இவர் போன்ற சாதகமுடையவர்களின் அங்க சேஷ்டைகளைப் பற்றிச் சொல்லத்தேவையில்லை. இவரிடம் அவை பெருமிதமாகக் காணப்படுகின்றன. அவைகளை அடக்கமுடியுமோ என்பது கேள்வி.

தெற்கத்திய சங்கீத மென்றாலே நாஜூக்கு இல்லாதது என்று இவ்விடத்து சங்கீத அபிமானிகளிற் சிலர் முகம் சுளித்து விடுவார்கள். ராமலிங்கமய்யரின் சங்கீதத்தில் அதிக நாஜூக்குக்கு இடமில்லை யென்பதும் வாஸ்தவமே. மலை நீர் வீழ்ச்சிபோல் கொட்டும் சக்தியே பிரதானமாகக் கொண்ட முறையில் மைதானத்தில் பாயும் சிறு ஓடையின் இழைந்து நெளியும் பான்மையை எதிர்பார்க்க முடியாது. இரண்டும் பிரத்தியேகமான வழிகள். இரண்டுக்கும் சங்கீதத்தில் இடமுண்டு. விசாலமான நோக்க மில்லாததாலோ, ஸ்வஸ்தல அபிமானங்களினாலோ, கண்மூடிக் கக்ஷிப் பிரதி கக்ஷிகளினாலோ அனாவசியமாய் எதையும் கவனியாது குறைவாக நினைத்தல்கூடாது. ராமலிங்கமய்யரின் பாட்டை முதல் முதலில் கேட்போருக்கு இப்பக்கங்களில் சாதாரணமாய் வழங்கிவரும் வழிகளிலிருந்து வேறான புதுமையாகவே காணப்படும். இரண்டொரு தடவை கேட்ட பின் அதன் விசேஷ அம்சங்களைப் பாராட்டாது இருக்கவும் முடியாது.

ஐயோ வீட்டுவாடகையே!

தேசத்தில் விலைவாசிக ளெல்லாம் குறைந்துவிட்டன. ஆனால் சிறு நகரங்களில் வீட்டுவாடகை என்ற 'செலவினம்' மட்டும் முன்னைப்போல வீங்கிய ஸ்திதியிலேயே இருந்துகொண்டிருக்கிறது. வீட்டு வரியெல்லாம் அதிகமா யிருப்பதால் வாடகை குறைக்க முடியவில்லையென வீட்டு சொந்தக்காரர்கள் சொல்கின்றனர். ஆகவே இந்த சமயத்தில் சர்க்காரோ முனிஸிபாலிட்டிகளோ நுழைந்து இந்த வீடுகளுக்கு இவ்வளவுதான் வாடகை யிருக்கலாமென்று நிர்ணயிக்கலாமென்றே தோன்றுகிறது. வீட்டு வரி வருமானம் குறைந்துபோகுமே என்று ஸ்தாபனங்கள் கவலைப்பட வேண்டாம். நிருவாகச் செலவை மேற்படி ஸ்தாபனங்கள் குறைத்து விடட்டும். கொழுத்த சம்பளங்களைக் குறைத்துவிடட்டும்.

இன்றைக்கு இத்தாலியில் இதே காரியம் செய்யப்பட்டிருக்கிறது. 2000 வெள்ளி நாணயங்களுக்கு மேலுள்ள சம்பளங்களை 100-க்கு 12 விதம் குறைத்து விடுவதென்று ஸர்வாதிகாரி முஸோலினி உத்தரவு போட்டிருக்கிறார். அதே மாதிரி வீட்டு வாடகைகள் 100-க்கு 12 பங்கு குறைத்து விட வேண்டுமென சர்க்கார் உத்தரவும் அந் நாட்டில் பறந்திருக்கிறது. கடை முதலியவைகளின் வாடகை 100-க்கு 15 பங்கு குறைக்க வேண்டு மெனவும் உத்தரவு போட்டிருக்கிறார். சாப்பாட்டு சாமான்களின் விலையும் பத்திலொரு பங்கு குறைக்கப்பட்டு இன்னின்ன விலைக்குத் தான் இன்னின்ன சாமான்கள் விற்கப்பட வேண்டுமென இத்தாலிய சர்க்கார் ஜாப்தா ஒன்று தயார் செய்திருக்கிறது.

அதை யெல்லாம் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் கவனிக்கிறதா, இல்லையா? உலகில் தாங்களாகவே புதிதாக எதையும் செய்ய ஆரம்பிக்கும் 'சேஷ்டைபுத்தி' இந்திய அரசாங்கத்துக்குக் கிடையாது. ஆனால் பிறநாடுகளில் ஏதாவது நல்ல விஷயங்கள் நடந்தால் அதை நகலெடுத்தாவது வேலை செய்யலாகாதா? கொழுத்த சம்பளங்களைக் குறைக்கட்டும். விலைவாசிகளையும் வீட்டு வாடகைகளையும் நிர்ணயித்து ஜாப்தாக்கள் வெளியிடலாமே!

விரலும் வீக்கமும்

விரல் உரலளவு வீங்கவாவது என்பார்கள். இந்தியாவில் அந்நிய வியாபாரம் என்ற விரல் உரலளவுக்கு வீங்கியிருக்கிறது. இந்த வியாதிக்கு மருந்து பூசி ஆற்ற வேண்டிய கடமை சர்க்காருடையது. பொது ஜனங்களும் கவனிக்க வேண்டியதுதான். ஒரு நாட்டினின்று எவ்வளவு தொகைக்கு சாமான்கள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி யாகின்றதோ. அவ்வளவே இறக்குமதியும் ஆகுமானால் அந்த தேசத்தின் லாப நஷ்டங்கள் சமமாகிப் போய்விடும். இந்தியாவினின்று பிறநாடுகளுக்கு ஏற்றுமதி யாகும் இயற்கைப் பொருள்களை மறந்துவிட்டு செயற்கை வஸ்துக்களை மட்டும் கவனிப்போம். இந்தியாவினின்று ஊறுகாயும் பப்படமும் ஏற்றுமதியாகிறதே யொழிய, சிறந்த தொழிற் சாமான் எதுவும் ஏற்றுமதி யாவதில்லை. ஆனால் மோட்டார், துணி, கத்தரிக்கோல் என்று லட்சக் கணக்கான வஸ்துக்கள் பல கோடி ரூபாய் மதிப்பில் வருடா வருடம் இந்த தேசத்தில் இறக்குமதியாகிக் கொண்டிருக்கிறது. இதைத்தான் விரலின் உரல் வீக்கமென்று நாம் குறிப்பிட்டோம். இந்த வியாதி சொஸ்தப் படுத்தப்பட வேண்டும்.

உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் ஜெர்மன் அரசாங்கம் ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. அந்தந்த நாடுகளுக்கு எவ்வளவு சாமான்களை ஜர்மனி அனுப்பிக் கொண்டிருக்கிறதோ அதே அளவுக்குத்தான் அந்தப் பிறநாடுகளும் தங்கள் சாமான்களை ஜர்மனிக்கு அனுப்பலாமென்று ஜர்மனியத் தலைவன் வான் நியூரா எச்சரிக்கை செய்திருக்கிறான்.

இந்தியாவின் ஆட்சி இந்தியர் கையில் இருக்குமாயின் இன்றைக்கு இந்தியாவின் நன்மையை முன்னிட்டு இந்தக் காரியத்தைச் செய்தே தீர்வார்கள். இந்தியாவின் நன்மைக்காகவே இங்கு தர்ம கர்த்தா உத்தியோகம் பார்ப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் அந்நியச் சாமான் இறக்குமதியை இந்த ரீதியில் கட்டுப்படுத்தி உபகாரம் செய்யலாகாதா? அந்நிய வர்த்தகம் என்ற சிறு விரல் உரலளவு வீங்கி யிருப்பதைக் காண வெட்கமா யில்லையா?

வீரப் பெண்!

லாகூரிலிருந்து ஓர் வீரப்பெண்ணின் செய்தி கிடைத்துளது. அவளுக்கு வயது பதினேழுதான். சிக்கிய குலத்திலுதித்தவள். இரண்டு கொள்ளைக்காரர்கள் கொல்லப்படுவதற்கும் ஒருவன் கைதியாக்கப் படுவதற்கும் அவள் வீரமே காரணமா யிருந்தது. அவளுடைய பெயர் ஹரநாம்கார்.

அந்தப் பிராந்தியத்தில் லால்சிங் என்பவன் பிரசித்திப்பெற்ற கொள்ளைக்காரன். அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு 3,000 ரூபா இனும் தருவதாகவும், இதர பரிசுகள் தருவதாகவும் சர்க்கார் விளம்பரப்படுத்தியிருந்தும் அவன் பிடிபடவே யில்லை. 17 வயதுள்ள இந்த யுவதியின் அழகும் ஆபரணங்களும் அவனை வசீகரித்தன. வீட்டில் ஆண்பிள்ளைத் துணை இல்லாமல் அவள் தனியாயிருந்த போது உள்ளே ஏறிக் குதித்தார்கள் திருடர்கள்.

ஹரநாம்கார் திருடர்களை எதிர்க்கத் தொடங்கினாள். வேறு வழியில்லையென்று திருடன் துப்பாக்கியை எடுத்து அவள் மீது வெடி தீர்க்கப் பார்த்தான். குபீரெனப் பாய்ந்து அந்த வீரப் பெண் துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டாள். அதற்குள் அவளுடைய சகோதரன் ஸ்தலத்துக்கு வந்துவிடவே அந்தத் துப்பாக்கியைத் தன் கையில் வாங்கிக்கொண்டு ஒரு திருடனை சுட்டுத் தள்ளினான்.

இதற்குள் கூரையிலிருந்த திருடர்கள் இந்த வீரப் பெண்ணை நோக்கிச் சுட்டனர். அவளுக்கு மார்பிலும் துடையிலும் காயம். அவள் ஒரு மரப் பலகைக்குப் பின் ஓடி நின்றுகொண்டாள். திருடர் தலைவன் கூரையினின்று இறங்கி அவளை நோக்கி வந்தான். அவன் கழுத்தில் ஒரு மாலை தொங்குவதைக் கண்ட ஹர்நாம்கார் அதைத் திடீரெனப் பற்றித் தன் பலங் கொண்ட வரை இழுத்தாள். அவனுக்கு மூச்சுத் திணறிக் கீழே விழுந்தான். அதற்குள் சகோதரன் அங்கு ஓடி வந்து திருடர் தலைவனை அடித்துக் கொன்றான்.

அங்கு நடந்த ரகளையில் அப்பெண்ணின் தகப்பனாரைத் திருடர் கொன்றுவிட்டனர். இவ்வாறு வீரங் காட்டிய ஹர்நாம்காரைப் புகழாதவர்கள் இல்லை.

வீரத்தில் நகைச்சுவை

"எஸ்"

இளவரசன் வேட்டையாடித் திரும்பும் பொழுது மறவர் வீதி வழியாய் வந்தான். அங்கே ஒரு அழகிய மங்கை நின்றாள். அன்றலர்ந்த செந்தாமரை போன்ற முகம், நீல மலர் போன்ற கண்கள் அச்செந்தாமரையில் மலர்ந்து இருந்தன. வயது பதினாறிருக்கும். அம்மங்கையைக் கண்டான்; அப்பெண்ணை மணந்தால்தான் தன் உயிர் நிலைக்கும் என்று எண்ணினான். பெண்ணுடன் பேசலா மென்றால் மெல்ல நகர்ந்து சென்று விட்டாள். என்ன செய்வான் பாவம்! அதே கவலையாய் அரண்மனை சென்றடைந்தான். என்று மில்லாமல் இன்று இளவரசனுக்கு என்ன வந்தது? ஏன் இப்படி முகவாட்டத்துடன் இருக்கின்றான்? வேட்டைக்குச் சென்று வந்ததும் வீரப் பிரதாபங்களைக் கொட்டியளப்பானே? இன்று மட்டும் ஏன் வாய்மூடி மௌனியாயிருக்கிறான்? அவனுடைய தோழர்கள் எல்லாரும் இப்படியாக விடுகதை போடுகின்றார்கள்.

அரச குமாரனை அடைந்து "ஏன் வாட்டமுற்று இருக்கின்றீர்கள்?" என்றனர். உள்ளதைச் சொன்னான். இதற்காக ஏன் வருந்த வேண்டும்? இளவரசுக்குப் பெண் தர யார் தான் மறுப்பார்கள்? நம்முடைய தூதுவர்களில் ஒருவனைத் தங்கள் திருமுக(ஓலை)த்துடன் அனுப்பினால் காரியம் உடனே முடிந்து விடும் என்றார்கள். அரச குமாரனும் மன மொப்பினான். தூதுவன் ஒருவன் அரச ஓலையுடன் மறவர் பதிக்குச் சென்றான். மறவர் பதியடைந்த மன்னவன்றன் தூதன் அரசன் எழுதிய ஓலையை மறவர் தலைவனிடம் கொடுத்தான். 'அது என்ன?' என்று மறவர் தலைவன் கேட்டான். "அது அரசனின் திருமுகம்" என்றான் தூதன். வந்த காரணம் என்ன? என்றான் மறவர் தலைவன். பெண் பேச வந்த செய்தியை விளக்கமாகத் தூதன் கூறினான்.

எழுத்து வாசனை யறியாத மறவர் தலைவன், நகைச்சுவை ததும்ப வீரப் பதில் கூறி யனுப்பி வைக்கின்றான்.

"ஏ! அரசனின் அழகிய முகத்தை இங்கே எடுத்துக்கொண்டு வந்த தூதா! தலையற்ற முண்டத்திற்கா மறவர் மகளைக் கேட்டாய்? எங்களை யாரென்று நினைத்தாயடா? எளியார்க்கு அடைக்கப் பொருளான திருவரங்கப் பெருமாளுடைய நேசன் குகன் பிறந்த பெருங்குலம் மறவர் குலம் என்பது உனக்குத் தெரியாதா? அதுதான் போகட்டும். தூதுவர் பொய் சொல்லக் கூடாது. இதை (ஓலையைக் காட்டி) திருமுகம் என்று கூறினாய். அப்படியே இது திருமுகமானால் வாய், காது, மூக்கு, கண் இதெல்லாம் எங்கேயடா சென்று விட்டன? அரசர்க்கும் அரசனான சக்ரவர்த்தி பெற்ற இள அரசுக்குப் பெண் வேண்டு மென்கின்றாய். சக்ரவர்த்தியே யாகட்டும், அவரைப் படைத்த பிரமனே தான் ஆகட்டுமே! அதற்காக அவன் இள அரசுக்கு யாராவது அருமைப் பெண்ணைக் கொடுப்பார்களா? போடா! புத்தி கெட்டவனே! அரசன் வளர்த்த அருமை அரசானால் அதன் குலத்திற்குத் தக்கபடி ஆலின் கொம்பை மணஞ்செய்து வைக்கச் சொல்."

மறக்குலத் தலைவன் கூறிய மொழிகளைத் தூதன் கேட்டான். இள அரசு என்றதை அரச குமாரன் என்று அறியாமல் இளம் அரசமரம் என்று பொருள் செய்துகொண்டே தலைவன் இப்படிக் கூறினான் என்று எண்ணினான். உடனே இளவரசு என்றுதான் அரசனின் அருமந்த மைந்தனையே கூறினமையை விளக்கி பெண்ணை மணஞ் செய்து கொடுக்குமாறு வேண்டிக் கொண்டான். இல்லையானால் அரசனின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதையும் விளக்கினான்.

மறக்குலத் தலைவன் தூதுவன் கூறிய மொழிகளை உணர்ந்தான். உணர்ச்சியும் கிளர்ச்சியும் கொண்டான். அப்பா மணம் பேசவந்த தூதுவனே! இந்தக் கறையான் அரிந்த ஓலை என்னத்திற்காகும்? அரிய வரங்களை எல்லாம் அருளும் அரங்கநாதனான திருமாலின் திருவடிகளிலே பற்றுக்கொண்ட மறவர்களான எங்கள் பெண்களின் மேல் காதல் கொண்டு இங்கு வந்த மன்னர்கள் எண்ணற்றவர். அவர்கள் வந்து பட்டபாட்டை எங்கள் ஊருக்குள் வந்து பார்த்து விட்டாகிலும் திரும்பிச் செல்லுவாய்! பூசனி, சுரை முதலிய கொடிகள் படருவதற்காக எங்கள் வாசலிலே எதை வைத்திருக்கின்றோம் தெரியுமா? அந்தக் காதற் கிறுக்கர்கள் பிடித்துக்கொண்டு வந்த குடைகள்தான். அவர்கள் தரித்துக்கொண்டு வந்த ரத்தினக்கிரீடம் இருக்கின்றதே அதுதானப்பா எங்கள் இல்லங்களில் தினை அளப்பதற்கு நாழி, கால், முதலிய அளவுகளாக உபயோகிக்கப்படுகின்றன. அவர்கள் டம்பமாக வீசிக் கொண்டுவந்த வெண் சாமரங்கள் எக்கதியாயின தெரியுமா? கூரைக் கட்டுவதற்கு நாராக அவற்றைத்தான் உபயோகப்படுத்தி யிருக்கின்றோம். தோட்டம் துறவுகளுக்கு வேலியிட்டு வைத்திருக்கின்றோமே! அது எதனால் என்று அறிவாயா? அவர்கள் எங்களுடன் போர் செய்த பொழுது உபயோகித்த அம்பு, வாள், வில் முதலியவையேதான். அறிந்துகொண்டாயா? உன் இளவரசனையாவது மரியாதையாக இருக்கச்சொல். இல்லையேல் அப்புறம்........." என்று உஷார்செய்து அனுப்புகின்றான். இதைப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அழகாக இரண்டு பாட்டில் கூறுகின்றார்.

"கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்?
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமான் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்!
மற்றதுதான் திருமுகமே ஆனால் அந்த
வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்
பெற்ற இள அரசு ஆனால் ஆலின் கொம்பைப்
பிறந்த குலத்திற் கேற்கப் பேசுவாயே!"

"பேச வந்ததூத! செல்லரித்த ஓலை செல்லுமோ? [லே
பெருவரங்கன் அருளரங்கன் பின்னைக்கேள்வர் தாளி
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா!
வாசலுக் கிடும்படர் கவித்துவந்த கவிகையே!
மகுடகோடி தினையளக்க வைத்தகாலும் நாழியும்!
வீசுசாம ரம்குடில் தொடுத்த கற்றை! சுற்றிலும்
வேலியிட்ட தவர்களிட்ட வில்லும்வாளும் வேலுமே."

—"தனவணிகன்."

காந்திஜியின் பிரயாணத்தில்

மகாத்மாவின் பிரயாண விவரங்களடங்கிய கடிதம் வாரந்தோறும் எழுதப் படுகின்றது. சமீபத்தில் கிடைத்துள்ள கடிதத்தின் சுருக்கம் பின்வருமாறு :—

சீதாதேவி பிறந்த விடத்தில்

சீதா மர்ஹி என்ற ஊருக்கு ஒரு மாலையில் போய்ச் சேர்ந்தோம். முஜபர்பூர் ஜில்லாவில் உள்ள இந்த ஊர்தான் அன்னை ஜானகி பிறந்த இடமெனச் சொல்கிறார்கள். இந்த ஊரில் தான் மகாத்மாஜீயின் ஆசிரமத் தொண்டர்கள் நிவாரண வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆசிரம ஊழியர்களுள் ஒருவரான ஒரு மகமதிய நண்பரிடமிருந்து மகாத்மாஜீ ஓர் செய்தி கேட்டார். தெரியாத் தனமாக யாராவது ஒரு மகமதியரோ கிறிஸ்துவரோ தீண்டி விட்டால் ஆதலால் உணவு வஸ்துக்கள் தீட்டுப்பட்டு விடுவதாகவும் அவைகளை ஏற்றுக்கொள்ளலாகாதென்றும் ஓர் சம்பிரதாயம் வெகு கடுமையாக அப்பாகங்களிலிருப்பதாக அந்நண்பர் கூறினார். மகாத்மாஜீ இந்தத் 'தீட்டு' எண்ணத்தைக் கண்டித்துப் பொதுக் கூட்டத்தில் பேசினார்.

"எது தீட்டு?"

"ஒரு மகமதியரோ கிறிஸ்துவரோ தீண்டுவதை அசுத்தமென்று நினைப்பது தவறான கொள்கை யென்று தோன்ற வில்லையா? கடவுள் பக்தராயும், சுத்தராயும், தைர்யவானாயும் தியாகியாயும் உள்ள ஒரு தூய முஸல்மான் தீண்டுவதுகூட தீட்டுத்தானா? மதங்களெல்லாம் கடவுளின் சிருஷ்டிகள். 'பக்கத்திலுள்ள மதம் என்னுடையதைவிடத் தாழ்ந்தது, அவர் என் மதத்தைச் சேர்ந்துவிடட்டுமே' என்ற எண்ணத்தை நான் ரகஸ்யமாகக்கூட கொள்ளக் கூடாதன்றோ?

"அவனவன் அவனவனுடைய மதத்திலேயே வளர்ந்து வாழவேண்டுமென்பதே எனது பிரார்த்தனை. கடவுளுடைய வீடு அநேக சிங்கார மாளிகைகளைக் கொண்டது. ஒவ்வொன்றும் புனிதமானதுதான். மனிதர்களுக்குள் சகோதரத்துவ மிருக்கவேண்டு மென்பதையும், ஒருவரை யொருவர் ஆதரிக்க

வேண்டுமென்பதையும் உலகின் ஒவ்வொரு பெரிய மதமும் சொல்லிவந்திருக்கின்றது. ஆனால் நமது ஹிந்து மதத்தை இந்த 'தீண்டாமை' என்ற சனியன் வளரவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. மனதை அது மரத்துப் போகச் செய்கின்றது; குருட்டுத்தனத்தையும், உண்டாக்கி ஏமாற்றுகின்றது. மனதில் யாருக்குத் தீய எண்ணங்கள் இருக்கின்றனவோ அவன் தான் தீண்டத்தகாதவன். பொய், பேராசை, பித்தலாட்டம் இவை நமது வாழ்வைக் கெடுக்கின்றன. இத்தகைய எண்ணமுடையோரே தீண்டத் தகாதவர்."

தர்பங்காவில்

பிறகு காந்திஜியின் கோஷ்டி தர்பங்கா சமஸ்தானத்தை அடைந்தது. தர்பங்கா மகா ராஜாவின் அதிதியாக மகாத்மாஜி இருந்தார். மகா ராஜா ஊரிலில்லாதபடியால் ராஜகுமாரர் காந்திஜிக்கு வரவேற்புப் பத்திரம் படித்துத் தந்தார். அங்கு நடந்த பிரம்மாண்டமான கூட்டத்தில் மகாத்மாஜி புராணக்கதை யொன்றை உதாரணமாகக் கூறித் தீண்டாமையைக் கண்டித்தார். "முந்திய ஜன்மத்தில் இரு சகோதரர்கள் சண்டையிட்டுக் கொண்டார்கள். ஆகவே சாபம் கிடைத்தது. ஒருவன் முதலையாகவும், இன்னொருவன் யானையாகவும் வந்து பிறந்தார்கள். அப்போதுகூட அவர்களுக்குள் இருந்த குரோதம் போகவில்லை. முதலை யானையின் காலைப் பிடித்து வலித்தது. தனது சக்தியெல்லாம் போதாதென்று கண்டவுடனே கஜேந்திரன் ஆதிமூலத்திடம் முறையிட்டது. பகவானின் அருளினால் அவர்களிருவரும் உருமாறி அன்புடைய சகோதரர்களாக வாழ்ந்தார்களென்பது கதை. மனித சகோதரர்கள் ஒருவரையொருவர் துன்புறுத்தலாகாது' விரோதித்துக் கொள்ளலாகாது என்பதே படிப்பினை.

இயற்கையின் எச்சரிக்கை

"வானத்தில் இடிக்கும் ஒவ்வொரு இடியும் நமக்கு எச்சரிக்கையாகவே நாம் கொள்ளவேண்டும், ஒவ்வொரு மின்னலிலும் தீயெழுத்துக்களில் நமக்கு எச்சரிக்கையைத் தீட்டிக் காட்டுகின்றது. பார்க்கிறோம். கேட்கிறோம். ஆனால் மனித ஜாதியாகிய நாம் ஸர்வஜன சகோதரத்துவதை உணருகின்றோமில்லை. இயற்கைத் தேவி தரும் எச்சரிக்கைகளைப் புறக்கணிப்போமாயின் வட்டிக்கு வட்டி போட்டு பிறகு அவள் வசூலித்து விடுகின்றாள்"

குந்தியின் பிரார்த்தனை

தர்பாங்காவை விட்டபின்பு மதுபாணி என்ற ஊருக்கு மறுநாள் காந்திஜி போய்ச் சேர்ந்தார். அகில இந்திய சர்க்கா சங்கத்தின் கதர் காரியாலயம் ஒன்று இங்கு நடந்து வருகிறது. இந்த ஊரில் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோயில்களும் கோபுரங்களும் பூகம்பத்தில் இடிந்து விழுந்து கிடப்பதைக் கண்டு காந்திஜி கண்ணீர் வடித்தார். அங்கு நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய போது காந்திஜி சொன்னதாவது:—

"ராஜா நகரில் கண்ட காட்சி மனிதனுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படக் கூடுமென்பதையே எனக்கு அறிவுறுத்திற்று. ஆனால் உடனே எனக்கு குந்திதேவி செய்த பிரார்த்தனை நினைவுக்கு வந்தது. "பகவானே! நான் உன்னை மறக்காமல் இருப்பதற்காக அடிக்கடி கஷ்டங்களையும் துர்ப்பாக்கியங்களையும் தந்து கொண்டிரு!" என்று குந்திதேவி பிரார்த்தித்தாளாம். குந்திதேவியின் அந்த ஹிமாலய நம்பிக்கை நமக்கெல்லாம் கிடையாது. ஆனால் அவள் வாக்கியத்திலின்று நாம்

ஒன்றைமட்டும் அறிந்துகொள்ளலாம். நமக்கு ஏற்படும் கஷ்டங்கள் நம்மை சுத்தமாக்குவதற்காக ஏற்படுவனவென் றும் கடவுளை வணங்க நாம் மேலும் மேலும் பக்குவப்பட வேண்டுமென் றும் உணரவேண்டும்."

நாலு லட்சம் பேர் தரிசனம்

பகலபுர ஜில்லா வழியாய் காந்திஜி செய்த பிரயாணத்தை ஒரு போதும் மறக்க முடியாது. கெட்டுப் போயிருந்த ரோடுகளின் மீது மோட்டாரில் ஒரே நாளில் 110 மைல் பிரயாணம் செய்தார். ஆங்காங்கு பதினாயிரக்கணக்கான மக்கள் தரிசனத்துக்காகக் கூடிக் கூடி நின்று கொண்டிருந்தனர். எழெட்டு மைல் நடந்து வந்திருந்த கிராமத்து ஜனங்கள் பலர். ஐந்தாறு இடங்களில் 50 ஆயிரத்துக்குமேல் இருக்கலாம் ஜனக்கூட்டம்! அந்த ஒரே தினத்தில் குறைந்தது 4 லட்சம் ஜனங்கள் மகாத்மாவைத் தரிசித்திருப்பர். காந்திஜி இந்தக் கூட்டங்களில் பேசவில்லை. பேச வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் அவர்கள் தரிசனத்துக்கு வந்தார்கள்; தரிசித்தார்கள்; சந்தோஷ மனத்தாராகத் திரும்பினார்கள். அவ்வளவுதான்.

ஸஹர்ஸா, பகல்பூர், மாங்கைர் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்து ஆங்காங்கு பூகம்பத்தால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு தேறுதலாகவும் ஹரிஜன முன்னேற்றத்தைப் பற்றியும் பிரசங்கங்கள் செய்த பின்பு மீண்டும் பாட்னா ஜில்லாவின் எல்லைக்கு வந்து சேர்ந்தார்.

கருப்புக்கொடிக்காரர்கள்

பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்ஹி என்ற ஊரில் கூடியிருந்தனர். அந்த ஊரில் மகாத்மாஜி நுழைந்த போது யாரோ சிலர் கருப்புக் கொடியுடன் வந்தார்கள். ஆகவே அன்றைய பேச்சு கருப்புக்கொடி என்ற விஷயத்தைப் பற்றி யிருந்தது.

"ராஜீயவாதி செய்யும் காரியங்களைச் செய்வதால் ஸனாதன தர்மத்துக்கு வளர்ச்சியுண்டா? ஸனாதன தர்மத்தையும் கருப்புக் கொடியையும் பிணைத்து எண்ணுவதற்குக் கூட என் மனதில் இடம் ஏற்படுவதில்லை. மிக்க அசங்கியமான சேர்க்கையாகவே இது எனக்குத் தோன்றுகிறது. ராய வேலைகளிலேயே கருப்புக்கொடிக்கு இடந்தரலாகாது என்று கருதுகிறவன் யான். இந்த 'சாமர்த்தியங்'களால் ஸனாதன தர்மத்துக்குப் பெருமை வருவதாக எவரும் எண்ணவேண்டாம். தாராள சிந்தை, தானும் வாழப் பிறரும் வாழ வேண்டுமென்ற எண்ணம், இவைகளே ஸனாதன மதம் போதிப்பவை. எல்லோரையும் சகிப்பதற்கு—கருப்புக் கொடிக்காரர்களையும் சகிப்பதற்கு யான் தயாராயிருக்கிறேன். கருப்புக்கொடிக்காரர்மீது யாரும் கோபப்பட வேண்டாம். கொடிகளைப் பிடுங்கலாகாது. அவர்களோடு எல்லோரும் நட்புரிமை பாராட்டவேண்டும். எனக்கு அவர்களால் என்ன தொந்தரவு ஏற்படும்? ஒன்றும் விளையாது. ஆனால் பழிக்குப் பழி என்ற எண்ணத்தினால் அவர்களை யாரும் தாக்கலாகாது. எனது அபிப்பிராயங்கள் யாருக்காவது பிடிக்கவில்லையானால் அவர் என் பேச்சைக் கேட்கவே வேண்டாம். இந்த தேசத்தில் பரஸ்பர மரியாதை காட்டுவது தான் ஞானத்துக்கு அடையாளம். அந்த ஞானத்தை அடைய நாம் அனைவரும் முயலுறுவோமாக! எந்த தர்மம் ஒரு துளஸிதாஸரை ஈன்றதாகப் பெருமை பாராட்டிக் கொள்கிறதோ அந்த துளஸிதாஸரின் வார்த்தைகளை மேற்படி தர்மம் கவனிக்கின்றதா? "எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரம் அன்பு. எல்லாப் பாபங்களுக்கும் பிதா ஜம்பம்" என்பது துளஸிதாஸரின் வாக்கு. இந்த வசனங்களைத் தீர்க்கமாக ஆலோசித்தால் இந்த தேசத்தில் இன்னமும் தீண்டாமைக்கும், ஜாதி அகம்பாவத்துக்கும் இடம் தருவோமா?"

ஒட்டைச் சிவிங்கி 500 பவுன்

திருவனந்தபுரம் சமஸ்தானம் ஆப்பிரிக்காவினின்று 500 பவுன் செலவில் ஒரு ஒட்டைச் சிவிங்கியை வரவழைத்து மிருகக் காட்சி சாலையில் விட்டுவைக்க வேண்டுமென்று விரும்புகின்றதாம். போயும் போயும் இந்த பணப்பஞ்ச காலத்திலா இந்த ஆலோசனை ஏற்பட வேண்டும்? சோற்றுக்கு ஊர் தாளம் போட்டுக்கொண்டிருக்கும்போது கண்காட்சி சாலையை விருத்தி செய்வதில் ஓர் சமஸ்தானம் முனைவதை யாரும் ஆதரிக்கமாட்டார்கள்.

தமிழ் அன்னை

"ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்" என்ற மெட்டு.

1. எங்கள் தமிழ்த் தாயே!—உந்தனை
யென்றுந் தொழுதிடுவோம்
தங்கக் கனி யமுதே!—உன திரு
தாளினை யேபணிவோம்.

2. கங்கை புனையீசன்—விடுத்த
குறுமுனி தன்மடியில்
தங்கி விளையாடு(ம்)—உயர் திரு
தேவி தமிழ்த்தாயே!

3. சங்கரர் சுந்திர ராய்—விளங்கிடு
செல்வ மதுரை யிலே,
சங்கத் தமிழ்ப் புலவர்—உளத்தினில்
தங்கிய மாமணியே!

4. சிங்க மெனுஞ் சோழர்,-பாண்டியர்,
சேர ரெனுமூவர்
மங்கி யறி யாத—புகழுடன்
மேவிய தாயகமே!

5. சிங்களம், சாவக மாம்—தேசங்கள்
சென்றந்த நாட்டினிலே
தங்கள் தொழில் களோடு-கலைகளும்
தந்த தமிழன்னையே!

6. எங்கும் புகழ் வீசும்—கம்பரொடு
எண்ணரிய கவிகள்
இங்கு உதித்தனரால்—உன்புகழ்
என்று(ம்) நிலைத்திடுமால்.

7. சங்கரர் போன்ற பல—உத்தமச்
சத்திய சீலர்களை
சங்கையில் லாமலே நீ-தோன்றிடச்
செய்தும கிழ்ந்திடுவாய்!

8. எங்கி யிருந்திடு மின்—நாட்டி லுள
ஏழை துயர மெலாம்
பங்க முறவே நீ—பாங்குடன்
பள்ளி யெழுந்தருளே!

—ரா. மு. கிருஷ்ண பாரதி.

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.

4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,

TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணு 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1 8 0

ஒரு பக்கம் 2¼" x 9" அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.

4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,

"சுதந்திரச் சங்கு",

8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables' Society

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8-c, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.